விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆனடு 2045 புரட்டாதி 09 வியாழக்கிழமை (25.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 280

## அரசுக்கு எதிராக ஒன்றிணைய எதிர்க் கட்சிகளுக்கு சந்தர்ப்பம்

### முன்னாள் ஜனாதிபதி தெரிவிப்பு

அரசாங்கத்துக்கெதிராக எதிர்க் கட்சிகள் ஒன்றிணைய இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா வலியு றுத்தியுள்ளார்.

தற்போதுள்ள அரசாங்கம் மக்கள விரோதப் போக்கை கொண்டுளளது. நாட்டின் மீது அக்கறையின்றி செயற் படுகின்றது. இதனை மாற்ற எதிர்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் எதிர்க்கட்சிகள் ஒன்றிணை வதற்கான அருமையான வாய்ப்பை வழங்கியுள்ளது. இதனை தவற விடக் கூடாது.

நிறைவேற்றுஜனாதிபதிமுறையை ஒழித்து நாட்டில் மீண்டும் நல்லா ட்சியை ஏற்படுத்த வேண்டும். நாட் டின் மீது அக்கறையுள்ள அனை வரும் அதற்காக முன்வர வேண்டும்.

எனக்குப் பதவி ஆசையில்லை. மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் நிற்கும் எண்ணமும இல்லை. ஆனால் மக்கள் விரோத ஆட்சியை அகற்ற எதிர்க்கட்சிகள் ஒன்றிணை ந்தால் அதற்கு பூரண ஆதரவை அளிப்பேன் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தொடர்நதும் வலியுறுத்தியுள்ளார். (எ-11)

## ஹிலாரியுடன் ஜனாதிபதி நியூயோர்க்கில் சந்திப்பு



(நியூயோர்க்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுக்கும் அமெரிக்க இராஜாங்கச்

20ஆம் பக்கம் பார்க்க....

## வாய்மொழி மூல அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்படும்

ஐக்கிய நாடுகள் மனித உரி மைப் பேரவை அமர்வுகளில் நேற்றைய தினம் சமர்ப்பிக்கப்பட இருந்த வாய்மொழி மூல அறி க்கை இன்றைய தினம் சமர்ப்பிக்க ப்பட உள்ளது.

இந்த அறிக்கையின் எழுத்து மூல அறிக்கை ஐக்கிய நாடுகள்மனித உரிமைப் பேரவையின் இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த கால மற்றும் நிகழ்கால குற்றச் செயல்கள், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரி க்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக குற்றச் செயல்களு க்கு தண்டனை விதிப்பதன் மூலம நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடி யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரி மைப்பேரவையின் பொதுச் செய லாளர் அல் ஹுசைய்னால் இந்த அறிக்கை நேற்றைய தினம் சமர்ப்பிக்கப்படவிருந்தது.

மனித உரிமைப்பேரவையினால் இலங்கை யுத்தக் குற்றச் செயல் கள் தொடர்பில் நடத்தி வரும் விசா ரணைகளுக்கு ஒத்துழைப்பு கோர ப்பட்டுள்ளது. என்ன காரணத்திற் காக இலங்கை தொடர்பான அறிக்கை இன்று வரையில் ஒத்திவைக்கப் பட்டது என்பது பற்றிய விபரங்கள் வெளியிடப்படவில்லை. (எ-11)

## தேசியப் பிரச்சினை குறித்து மு.கா-கூட்டமைப்பு பேச்சு!

### நாளை நடத்தத் திட்டம்

(கொழும்பு)

*தேசிய இனப்பிரச்சினை குறித்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள் ளது. நாளை இந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளது.*

20ஆம் பக்கம் பார்க்க..

## மாகாண சபை இன்று கூடுகிறது

(கொழும்பு)

வடக்கு மாகாண சபையின் 16 ஆவது அமர்வு இன்று நடைபெற வுள்ளது. வடக்கு மாகாண சபை யின் மாதாந்த கூட்டத்தொடர் கைதடி யில் உள்ள வடக்கு மாகாண சபை யின் கட்டட தொகுதியில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. வடக்கு மாகாண சபை 2013 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்டு இன்றைய அமர்வு 16ஆவது அமர்வாகும். இதன்போது உறுப்பினர்களால் பிரேரணைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன் ஆளுநரால் அங்கீகரிக் கப்பட்ட நிதி நியதிச்சட்டம், முத்திரை கைமாற்று சட்டம் என்பனவும் சபை

20ஆம் பக்கம் பார்க்க....

## உலகத் தலைவர்களை சந்தித்தார் ஜனாதிபதி



(நியூயோர்க்)

ஐ.நா. பொதுக்கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரையாற்றுவ தற்காக அமெரிக்கா சென்றிருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நியூ யோர்க்கில் வைத்து நேற்று உலக நாடுகளின் தலைவர்கள் பலரை யும் சந்தித்திருக்கிறார்.

20ஆம் பக்கம் பார்க்க....

## 25 பேருக்கு யாழில் டெங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக் குட்பட்ட பிரதேசங்களில் கடந்த ஓக ஸ்ட் மாதம் 25 டெங்கு நோயா ளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத் தியதிகாரி தெரிவித்தார்.

பாசையூர், நாவாந்துறை போன்ற பகுதிகளில் கூடுதலான டெங்கு நோய் தொற்று உள்ளானவர்கள் காணப்பட்டதாகவும், உடனடியாக அப்பகுதிக்கு தமது குழுவினர் விஜ யம் செய்து பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு உரிய நடவடிக்கை களையும் உதவிகளையும் செய்தி ருந்ததாக அவர் கூறினார்.

நோய்த்தாக்கம் இனங்காணப் பட்ட பகுதிகளில் நுளம்பை அழிக்கும்

20ஆம் பக்கம் பார்க்க....

## மக்களைப் பாதுகாப்பதில் அக்கறை செலுத்துவோம்

### பொது பல சேனா தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்த, இந்து மக்களை அழிக் கும் இனவாத செயற்பாடுகளை தடுத்து தமிழ், சிங்கள மக்களைப் பாதுகாப்பதில் நாம் அக்கறை செலுத் துவோம். இந்த விடயங்களுக்கு இந்தியாவும் எமக்கு துணை நிற்க வேண்டும் என்று பொது பல சேனா அமைப்பினர் பா.ஜ.கவின் தலைவர களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை வந்துள்ள பா.ஜ.கவின்

20ஆம் பக்கம் பார்க்க....

## தடம் புரண்டது யாழ்தேவி



20ஆம் பக்கம் பார்க்க....

## பொதுநலவாய நாடு விவகாரம் கமலேஸ் சர்மாவுடன் பேச்சு

(நியூயோர்க்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுநலவாய நாடுகள் அமைப் பின் பொதுச் செயலாளர் கமலேஸ் சர்மாவை சந்தித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெ ரிக்காவின் நியூயோர்க்கிற்கு விஜ யம் செய்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கமலேஸ் சர்மாவை சந் தித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் விவ காரங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

நியூயோர்க்கில் பொதுநலவாய

20ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# வேலணை மனித எச்சம் குறித்து அறிக்கை கோருகிறது நீதிமன்று

வேலணையில் மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதி முன்னர் மயானமாக காணப்பட்டதா? என்பதனை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

வேலணை பிரதேசசபை வளவில் மின்மாற்றி அமைப்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை கிடங்கு வெட்டப்பட்டபோது, மனித எலும்பு எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன.

அந்த இடத்தில் மனிதப்புதை குழி இருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டிருந்த நிலையில் குறித்த இடம் பற்றிய அறிக்கையை கோரியுள்ளது நீதிமன்றம்.

கடந்த திங்கட்கிழமை குறித்த இடத்தை ஊர்காவற்றுறை நீதிவான் லெனின்குமார்; தோண்டப்பட்ட குழிகள், அவற்றிலிருந்து மீட்கப்பட்ட மனித எலும்பு எச்சங்கள் என்பவற்றை பார்வையிட்டார்.

அதன்பின்னர் குறித்த பகுதியில் இடுகாடு முன்னர் இருந்தது என்று கூறப்படுகிறது. அதனால் குறித்த வளவின் வரைபடத்தையும் வேலணை பிரதேசம் குறித்த தரவுகளில் இந்த இடம் பற்றிய தகவல்கள் உள்ளதா என்பதை ஆராயும் பொருட்டு வேலணை பிரதேசம் சார்ந்த நூல்களையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவு இடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை கிடைத்த பின்னரே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதுவரை குறிப்பிட்ட பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-4)

# மரண அறிவித்தல்



## கந்தசாமி தர்மராஜா

(ஓய்வுபெற்ற அதிபர்)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தர்மராஜா (ஓய்வு பெற்ற அதிபர்) 19.09.2014 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சோதிமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி-தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், நல்லதம்பி உபாத்தியாயர் -சின்னத்தங்கத்தின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற குலக்கொழுந்து மற்றும் ராஜபூபதி, கோபாலகிருஷ்ணன், குலகேசரிஅம்மா, சிவமலர் ஆகியோரின் அன்புச்சகோதரரும், மிதிலாதேவி, கணேசராஜா, விக்னராஜா, குகராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.09.2014 அன்று கனடாவில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(சி-8585)

தகவல் :
குடும்பத்தினர்

## மாங்குளத்துக்கு புதிய பொறுப்பதிகாரி

மாங்குளம்பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக உதயகுமார நேற்று நியமிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இங்கிரிய பிரதேசத்தில் கடந்த 10 ஆம் திகதி பொலிஸாரின் கெப் ரக வாகனத்துடன் மோட்டார்சைக்கிள் மோதிஏற்பட்ட விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்துச் சம்பவத்தை குறித்த பொலிஸ் பொறுப்பதிகாரிமறைத்த காரணத்துக்காகவே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி

(ஓய்வு பெற்ற அதிபர் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி;
முன்னாள் தலைவர், தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்)



தாவளை இயற்றாலை மந்துவிலைப் பிறப்பிடமாகவும், இடைக்குறிச்சி வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி 23.09.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தில்லைநாயகி தம்பதியினரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் உமா மகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், கார்த்திகா (கனடா), தாட்சாயினி, சாரங்கன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசகுமாரசாமியின் (ஜேர்மனி) அன்புச் சகோதரனும், காமேஸ்வரியின் (ஜேர்மனி) மைத்துனரும், பிரதீபன் (கனடா), நர்மதா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், சரண்யா (கனடா) அஸ்வின் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், அகிலன் (ஜேர்மனி), இராகவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பிற்பகல் 2.30 மணியளவில் மாசேரி கப்பத்தை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

இடைக்குறிச்சி
வரணி.

(7666)

தகவல்:
குடும்பத்தினர்
0776093063

# வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(பதுளை)

ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனுக்கு, இந்த பணிப்புரையை தேர்தல்கள் ஆணையாளர் வழங்கியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர் மாகாணத்தின் பல இடங்களில் அடிக்கடி ஆளும் எதிர்க்கட்சியினருக்கு இடையில் மோதல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

மோதல் சம்பவங்களை தடுக்கும் நோக்கில் ஊவா மாகாணத்தின் பாதுகாப்பு கடமைகளுக்கு விசேட அதிரடிப்படையினர் அழைக்கப்பட்டுள்ளதுடன், கலகத் தடுப்புப் பொலிஸாரும் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் வெற்றியின் பின்னர் ஆளும் கட்சி சில ஆதரவாளர்கள், எதிர்க்கட்சி ஆதரவாளர்கள், வேட்பாளர்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தேர்தல்களின் பின்னர் இடம்பெற்ற வன்முறைகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இதுவரையில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-11)

# வெற்றியைக் கொண்டாடினார் ஹரின் பெர்ணான்டோ

ஊவா மாகாணத்தில் கிடைத்த வெற்றியை ஐக்கிய தேசியக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட்ட ஹரின் பெர்ணான்டோ கட்சியின் பிரதிநிதிகளுடன் கேக் வெட்டி கொண்டாடினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அப்போது இந்த வெற்றி கொண்டாடப்பட்டது.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, தலைமைத்துவச் சபையின் தலைவர் கரு ஜயரிய, தயா கமகே, கே.வேலாயுதம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஊவா மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட்ட ஹரின் பெர்ணான்டோ பதுளை மாவட்டத்தில் போட்டியிட்டு ஒரு லட்சத்து 73 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பெண்ணின் தலைமுடியினை கத்தரித்த மர்ம நபர்கள்

(யாழ்ப்பாணம்)

பெண்ணொருவரின் வீட்டில் நுழைந்த மர்ம நபர்கள், அப்பெண்ணின் முடியினை வெட்டிவிட்டுச் சென்ற வினோத சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு தொண்டைமானாறு, ஊறணி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி பெண்ணின் கணவர் வெளிநாட்டிலுள்ள நிலையில், மூன்று பிள்ளைகளுடன் அப்பெண் தனித்து வசித்து வந்துள்ளார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம்இரவு குறித்த பெண்ணின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த மர்ம நபர்கள் சிலர், அவரை பலவந்தமாக மடக்கிப் பிடித்து கூந்தலை கத்தரித்து விட்டுச் சென்றுள்ளனர்.

இந்த சந்தர்ப்பத்தில், பெண்ணின் 13 வயது மகளுக்கு வெட்டுகாயங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக குறித்த பெண் வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (எ-11)

# வாஸ் குணவர்த்தனவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரான வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட ஐந்து சந்தேக நபர்களையும் அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

வாஸ் குணவர்த்தன, அவரின் மகனான ரவீந்துரு குணவர்த்தன, முன்னாள் பொலிஸ கான்ஸ்டபிள்களான ஏ.காமினி சனத்சந்திர, ஏ.பீ.பிரியந்த சஞ்சீவ, லக்மினி இந்திக பமுனுசிங்க ஆகிய ஐவருக்குமே இந்த விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஐந்து சந்தேக நபர்களுக்கு எதிரான விசாரணை முடிவடைந்து, அதற்கான அறிக்கை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவரிடமிருந்து இன்னும் அறிவுறுத்தல்கள் வரவில்லை எனவும் புலனாய்வு பொலிஸ் பிரிவின் உதவி பொலிஸ அத்தியட்சகர் ஷானி அபேசேகர நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதையடுத்து, சந்தேக நபர்களுக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டு இவ்வழக்கின் விசாரணைகள் எதிர்வரும் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த ஐந்து சந்தேக நபர்களும் அதி சக்தி வாய்ந்த வெடிமருந்துகள், துப்பாக்கிகள் போன்றவற்றை கலகெடிஹேன பிரதேசத்திலுள்ள காணி ஒன்றில் மறைத்து வைத்திருந்ததார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


## கடை வாடகைக்கு

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் (பஸ் நிலையம் அருகாமையில்) சகலவித வியாபாரத்திற்கும் ஏற்ற கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
(சி-8581) 0772533390

## உடனடியாக தேவை

17-55 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/= 26000/= 38000/= கொழும்பை அண்மித்த டொபி/ கோடியல்/ பிளாஸ்டிக்/ வாசனைத் திரவியம்/ நூடில்ஸ்/ பால்மா/ மாபிள்... போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ தரம்பிரித்தல்/ களஞ்சிய பிரிவுகளில் பல வெற்றிடங்கள் உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில்.

மேலதிக தகவல்களுக்கு
(சி-8558) 077 5997295

## SPEED

PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

மங்கல நிகழ்வுகள், வீடுதிகள், ஹோல்கள் (Hall) விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.




ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392

(C-8284) (சி-8579)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பர
தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532
021 221 7603

## ஊவாத் தேர்தலில் 14 கட்சிகள் போட்டியிட்டன 11 கட்சிகள் ஒரு ஆசனத்தைக்கூட பெறவில்லை

நடந்து முடிந்த ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட - அங்கீகரிக்கப்பட்ட 14 அரசியல் கட்சிக ளில் 11 கட்சிகளுக்கு ஓர ஆசனம்கூட கிடைக்க வில்லை.

பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட பத்து அரசியல் கட்சிகளில் ஏழும் மொனராகல மாவட்டத்தில் போட்டியிட்ட 12 கட்சிகளில் ஒன்பதும் ஓர் ஆசனத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. இவ்வாறு தோல்வியடைந்த அரசியல் கட்சிகளில் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியும், சரத் பொன்சேகா தலைமையிலான ஜன நாயகக் கட்சியும், அமைசசர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் றிசாத் பதியுதீனின் மக்கள் காங்கிரசும் இணைந்து போட்டியிட்ட ஜனநாயக ஐக்கிய கூட்டமைப்பும் ஓர் ஆசனத்தையேனும் பெற்றுக் கொள்ளவில்லை.

இந்தப் பிரதான கட்சிகளுக்கு மேலதிகமாக ஜனசெத பெரமுன, அபே ஜாதிக பெரமுன, ஐக்கிய லங்கா மகா சபாவ, லிபரல் கட்சி, ஐக்கிய லங்கா பொதுஜன கட்சி, ஐக்கிய சமாஜ்வாதி கட்சி, இலங்கைத் தொழிலாளர் கட்சி மற்றும் மவ்பிம ஜனதா கட்சி ஆகிய கட்சிகளும் படுதோல்வி அடைந்துள்ளன. (இ)

## நவராத்திரி பாமாலை



தேவிகளின் வருகை-நம் இந்துக்களின் நவராத்திரி
அரி மீதிருந்து அருள் பாலிக்கும் தூர்க்கையே!
உன் மலர்ப்பாதம் தொழுகிறோம் எம் வாழ்வோங்க
வஷ்சுரங்களின் அதிபதியாம் தூர்க்கையே!
எம் மனதினை மறவர்களாக மாற்றும் அன்னையே!
உன் வரம் வேண்டி இந்நாளில் வணங்குகின்றோம்
எம்மை காத்தருளும் தாயே!
அகிலமெல்லாம் நீதி நிலைநாட்டி
மக்களின் மனதினை தூய்மையாக்கிட - வரம் தரும்
தெய்வமாய் அவதார தேவியாக தோன்றியவளே
உன் வரம் வேண்டி வணங்குகின்றோம் இந்நாளிலே!

பூ.பகிஜா, தரம் 08B

## 52 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### ரிஷி தொண்டு நாதசுவாமிகள்
### ஹவாய் தீவு அமெரிக்கா



ஏழைகளுக்கு வாழ்வெழுதிப்போனாய்...
உன் முகம் தெரியாமலே குடிசைகள்
பல உயிர் வாழ்கின்றன.
ஆயிரம் பேர் ஆடம்பரமாய் வாழ
நீ ஏலாதவர்களுக்கும் ஏழைகளுக்கும்
சொத்தென்று யாத்திரைபோனாய்
பூவாக பலர் வாசம் வீச வேராகினாய்
யாருக்கும் வெளியில் தெரியாத பெயராகி
துவண்டுபோகும் மக்களின் உயிராகினாய்
தனக்கு என்று எதுவுமில்லாமல்
எல்லாம் துறந்து துறவியாகினாய்
மண்ணே வியக்கும் பிறவியாகினாய்
வீதியுலாவிற்காக வெளியில் வராத விக்கிரகமே...
வீழ்ந்து போகாது உன்நாமம்
வாழ்க இன்னும் நூறாண்டு.
இறைவன் ஆசியோடு
வாழ்த்துகின்றேன் இந்நாளில்....

வாழ்த்தும் என்றும் அன்புடன்
து.சுதர்சன் (ஆசிரியர்)


## நிரந்தர தொழில் வாய்ப்பு

உங்கள் எதிர்காலவாழ்க்கைக்கு நிரந்தர தொழில் ஒன்றினைப்பெற எம்மோடு இணையுங்கள். கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகளான ஜேம்/ டொபி/கோடியல்/ பிளாஸ்டிக்/ டயர்/ பொலித்தீன்/ கிளவுஸ்/ Printing.... போன்றவற்றில் உற்பத்தி) லேபல்/பொதியிடல்/களஞ்சியபிரிவுக்கு 17-55 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/= 38000/= உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில் வருகை அன்றே வேலைக்கு செல்லலாம்.

தொடர்புகளுக்கு:- 077 9141804 (சி-8560)

## வேலைவாய்ப்பு

உங்களின் கனவு எங்களின் பொறுப்பு. கல்வி தகைமை சிங்களம் அவசியமில்லை. பிரதான 195 தொழிற்சாலைகளில் 500 இற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள். (உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ தரம்பிரித்தல்) வயது 18-50 ஆண்/ பெண் சம்பளம் 24000/= 35000/= வரை. விவாகமானவர், குழுக்கள், நண்பர்கள் ஒரே தொழிற்சாலைகளில் வருகை. அன்றே வேலை மேலதிக தகவல்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

முல்லைத்தீவு- 077 4430166 யாழ்ப்பாணம்- 077 1116770
கிளிநொச்சி-077 4567082 (சி-8537) வவுனியா- 077 8304013

## நிரந்தர வேலைவாய்ப்பு

உங்களுடைய திறமைக்கு ஏற்ற 18000/=- 38000/= சம்பளம் (கொழும்பு/ மயகம/ களனி/ கொட்டாவ/ பிலியந்தலை/ ஓமாஹம/ கடவத்தை/ தெஹிவளை/ ஜாஎல/ கட்டுநாயக்க/ நிட்டம்புவ/ (ஜேம், டொபி, கோடியல், ஸ்டிக்கர், காபெட், கிளவுஸ், ஆடை உற்பத்தி), லேபல், பொதியிடல், Loading Unloading பிரிவுக்கு வயது 18-50 ஆண், பெண் தேவை. குழுவினர் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள்.

(சி-8556) தொடர்பு:- 077 4307222

## வேலைவாய்ப்பு

நிரந்தர வேலை ஒன்றினை பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள். கொழும்பை அண்மித்த பிரதேசத்தில் ஜேம்/டொப்பி/ பிஸ்கட்/ நூடில்ஸ்/ பால்மா/ மாபிள்/ கிளவுஸ் போன்ற பல தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி / லேபல்/ பொதியிடல்/ களஞ்சிய பிரிவுக்கு 17-55 வயது ஆண்/ பெண் தேவை. சம்பளம் 18000=, 25000/= ,38000/= உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில் (குழுக்கள் நண்பர்கள் ஒரே தொழிற்சாலையில்) வருகை அன்றே வேலை.

(சி-8557) தொடர்புக்கு:- 077 4805891

## தொழில்வாய்ப்பு

ஏற்றுமதி, இறக்குமதி தொழிற்சாலைகளான 150 இற்கும் மேற்பட்டவற்றில் உற்பத்தி/லேபல்/பொதியிடல்/தரம்பிரித்தல்/களஞ்சிய பிரிவுகளுக்கு 17-55 வயது ஆண், பெண் இருபாலாரும் சம்பளம் 19000/= 28000/= 38000/= உணவு, பாதுகாப்பான தங்குமிடம் சகாய விலைகளில் (விசேடம் நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே இடம்) வருகை தரும் நாளிலே வேலை. (சி-8559)

தொடர்புக்கு:- 077 222 5889

## அரிசி ஆலையுடன் கூடிய தோட்டக்காணி விற்பனைக்கு

கோண்டாவில் பஸ் டிப்போக்கு அருகாமையில் பலாலி வீதியிலிருந்து கிழக்குத்திசையில் கனரக வாகனங்கள் செல்லக் கூடிய 50 மீற்றர் தொலைவில் சுற்று மதில்களைக்கொண்ட 41 பரப்புக் காணி ஏற்கனவே இயங்கிய அரிசி ஆலை ஒன்றுடனும் நவீன முறையில் அமைக்கப்பட்ட 6500 சதுர அடி களஞ்சியத்துடனும் விற்பனைக்குண்டு. சுமார் 60 தென்னை மரங்களும், 40 தேசி மரங் களும், 2 வெட்டுக் கிணறு, 2 குழாய்க்கிணறு மேலதிகமாகவும் காணப் படுகின்றது. மேலதிக விபரங்கட்கு 021 222 8593 அல்லது 021 222 2367 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணிவரை தொடர்பு கொள்ளவும். (சி-8580)


## இராசி பலன்

25.09.2014
(புரட்டாதி 9, வியாழக்கிழமை
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
பிரதமை பிற்பகல் 1.23 மணிவரை
அத்தம் முன்னிரவு 8.25 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை

வளவன்

**மேடம்:** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், தனவரவு திருத்திகரமாக அமையும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** சந்தோசமான அனுபவங்கள் ஏற்படும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், விருந்தினர் வருகையுண்டு, பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்:** பெரியோர்களின் ஆசி கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறலாம், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** பொருளாதார வளர்ச்சி கூடும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், உடல்நலம் சீராகும், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புகளும் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்:** தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், மற்றவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** வெற்றிச் செய்திகள் வீடுவந்து சேரலாம், உறவினர் பகை அகலும், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், [illegible] நாள்.

**தனுசு:** தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், செல்வாக்கை காப்பாற்றி உறவினர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**மகரம்:** வருமானம் போதுமானதாக இருக்கும், தேக நலனில் தெளிவு பிறக்கும், எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரும்.

**கும்பம்:** அலைச்சல்கள் அதிகரிக்கும், அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் சிறப்புகளைக் காண வேண்டிய நாள், வரவைவிட செலவுகள் அதிகமாகும்.

**மீனம்:** கனவு பலிதமுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 பயனாளிகளுக்கு வாழ்வாதார தொழிற்றுறை சார்ந்த உபகரணங்கள்


பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் பனை, கித்துள் உற்பத்திகளின் கைப்பணிப் பயிற்சியினை பூர்த்தி செய்த 60 பயனாளிகளுக்கான வாழ்வாதார தொழிற்றுறை சார்ந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போதே இவ் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

இதில் யாழ்ப்பாணம், தாவடி, உரும்பிராய், சங்கானை, சண்டிலிப்பாய், இணுவில், வரணி, காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பகுதிகளில் பனை, கித்துள் கைப்பணிப் பயிற்சி நெறியினை நிறைவு செய்த உற்பத்தியாளர்களுக்கே இத் தொழிற்றுறை சார்ந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் 60 ஆயிரம் ரூபா பெறுமதியில் ஒருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மனைப்பொருளாதார உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம கலந்துகொண்டு 60 பயனாளிகளுக்கான உபகரணங்களை வழங்கி வைத்தனர். மேலும் இந்த நிகழ்வில் பனை அபிவிருத்தி சபை முகாமையாளர்கள் மற்றும் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர். (இ-23)




# மாட்டிறைச்சியினை கொண்டு சென்ற நபருக்கு 10ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது நீதிமன்று

(கரணவாய்)

அனுமதிப்பத்திரம் இன்றி 51 கிலோ கிராம் நிறையுடைய இறைச்சியினை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற நபரொருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

அனுமதி இல்லாமல் மாட்டினை கொன்று இறைச்சியாக்கி மோட்டார் சைக்கிளில் துன்னாலை வீதி வழியாக பயணிக்கும் போது போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் குறித்த நபர் சிக்கியுள்ளார்.


இதனையடுத்து அந்நபரை பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் பறிமுதல் செய்யப்பட்ட மாட்டு இறைச்சியினை தீயிட்டு எரிக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.(இ-60)

# யாழ்ப்பாணம்-இரத்மலானை இரவு, பகல் பேருந்து சேவை

இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ்.சாலையினால் யாழ்-கொழும்பு, கொழும்பு-யாழ் வரை சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற காலை 6.45 மணிக்கு புறப்படும் சாதாரண கட்டண பேருந்து சேவை, இரவு 8 மணிக்கு புறப் படும் அரைச் சொகுசு பேருந்து சேவைகள் அனைத்தும் பொது மக்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க இன்று தொடக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு மத் திய பேருந்து நிலையம் சென்று அங்கிருந்து இரத்மலானை வரை சேவையாற்றப்படும். எனவே யாழ்ப்பாணத்திலிருந்து இரத்மலானை வரை செல்லும் பிரயாணிகள் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் ஆசன முற்பதிவினை மேற்கொள்ளலாம் என இலங்கைப் போக்குவரத்துச் சபை (வடக்கு) யாழ்.சாலை முகாமையளர் செ.குலபாலசெல்வம் அறிவித்துள்ளார். (இ





வரலாற்று பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது...
(படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# கழிவுப்பொருட்களினை தொட்டியில் போடுங்கள்

யாழ். வரணிப் பிரதேச பொதுச் சுகாதார பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் தமது வீடுகளில் சேரும் பாவனைக்குதவாத கழிவுப் பொருட்களை சேகரித்து உரிய இடத்தில் போடுமாறு சாவகச்சேரி பிரதேச சபை அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம்தகரம், கண்ணாடி, உடைந்த போத்தல்கள், பிளாஸ்ரிக் கழிவுகள் என பயன்படுத்தப்படாத பொருட்களை கழிவுப் பொருட்கள் போடுவதற்கென பிரதேச சபையால் வைக்கப்பட்டுள்ள கழிவுதொட்டிகளில் போடுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

இக்கழிவுத்தொட்டிகள் கட்டையடிச்சந்தி, சுட்டிபுரம் அம்மன் ஆலய முன்றல், வரணி மத்திய கல்லூரி முன்றல், வரணிச்சந்தை, துணுக்காய் சந்தி ஆகிய பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளன.

இக்கழிவு தொட்டிகளில் இருக்கும் குப்பைகள் பிரதி புதன்கிழமைகளில் சாவகச்சேரி பிரதேச சபையினரால் அகற்றப்படும் என அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-29)




# அபிவிருத்தி திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு

வருடாந்த அபிவிருத்தி திட்டத்திற்கு அமைய வட மாகாண சபை உறுப்பினர் வேலுப்பிள்ளை சிவயோகன் தனக்கு வழங்கப்பட்டுள்ள நிதியில் இருந்து பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையினை வழங்கியுள்ளனர்.

இதற்கமைய உள்ளூராட்சி திணைக்களத்தின் அமுலாக்கத்துடன் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட சனசமூக நிலையங்களின் கட்டட வேலைகள், மின்னிணைப்பு வழங்குதல் குழாய்கிணறு அமைத்தல், மலசல கூட நிர்மாணம், மைதானப் புனரமைப்பு போன்ற வேலைத் திட்டங்களுக்கும் மற்றும் மயானபுனரமைப்புக்கள், பொதுக்கிணறு அமைத்தல், பேருந்து நிலையப் புனரமைப்பு போன்ற செயற்றிட்டங்களுக்கு நிதியினை ஒதுக்கியுள்ளார்.

இவ்வாறான செயற்றிட்டங்கள் கரவெட்டி பிரதேச செயலக பிரிவில் உள்ள கிராம சேவையாளர் பகுதியில் உள்ள முன்பள்ளி நிலையம், சனசமூக நிலையங்கள் மற்றும் புனரமைப்பு போன்ற செயற்றிட்டங்கள் அமையும்.

ஜே/380 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட அல்வாய் கிழக்கு பாரதி முன்பள்ளி நிலையத்தின் கட்டடப்புனரமைப்பிற்கு 50 ஆயிரம் ரூபாவும், ஜே/358 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட இமையாணன் கலைமகள் முன்பள்ளி நிலையத்தின் கட்டட திருத்த வேலைக்காக 50 ஆயிரம் ரூபாவும், ஜே/ 353 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட வெலியந் தோட்டம் காந்தி சனசமூக நிலையத்திற்கு மின்னிணைப்பு வழங்குவது தொடர்பாக 30 ஆயிரம் ரூபாவும், ஜே/375 கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட நெல்லியடி வடக்கு வதிரி கலா நிலைய சனசமூக நிலையத்திற்கு குழாய்க்கிணறு அமைத்தலுக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஜே/ 350 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட அண்ணா சிலையடி சனசமூக நிலையம் மற்றும் வள்ளுவர் சனசமூக நிலையம் என்பவற்றின் மலசல கூட நிர்மாணம் என்பவற்றுக்கு ஒரு இலட்சம்ரூபா வும், ஜே/349 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மண்டான் மாவலி சனசமூகநிலையத்தின் கட்டடப் புனரமைப்பிற்கு 50 ஆயிரம் ரூபாவும், ஜே/378 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் மைதானப் புனரமைப்பிற்கு 50 ஆயிரம் ரூபாவும், ஜே/349 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட கரணவாய் மேற்கு வல்லியாவத்தை திருமகள் சன சமூக நிலையத்திற்கு மின்னிணைப்பு வழங்குவது தொடர்பாக 20 ஆயிரம் ரூபாவும், ஜே/ 370 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட வல்லியானந்தம் சனசமூக நிலையத்தி ற்கு மின்னிணைப்பு வழங்குவது தொடர்பாக 16 ஆயிரம் ரூபாவும், ஜே/ 363 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட நெல்லியடி இராச கிராமம் சனசமூக நிலையத்திற்கு மின்னிணைப்பு வழங்குவது தொடர் பாக 20 ஆயிரம் ரூபாவும், ஜே/349 கிராம சேவையாளர் பிரிவிற்கு ட்பட்ட கரணவாய் மேற்கு வல்லை இந்து மயான நுழைவாயிலுக்கு இரும்புக்கதவு அமைத்தலுக்கு ஒரு இலட்சம் ரூபாவும், ஜே/ 376 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட நெல்லியடி பேருந்து நிலைய புனரமைப்பிற்கு 2 இலட்சம் ரூபாவும் ஜே/372 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மித்தில் பொதுக்கிணற்றுக்கு தகரவேலி அமைத்தலுக்கு 25 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 7 இலட்சத்து 61 ஆயிரம் ரூபா நிதியினை வழங்கியுள்ளார். (இ

# மாணவர்கள் 150 பேருக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

மானிப்பாய் சிற்றி லயன்ஸ் கழகத்தால் 150 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் முதியோருக்கு உடுபுடைவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

லயன் சி.நாகையா தலைமையில் அண்மையில் சாவற்கட்டு கிராமத்தில் உள்ள மகாத்மா சனசமூக நிலையத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போதே இக்கற்றல் உபகரணங்களும் உடுபுடைவைகளும் வழங்கப்பட்டன.

மேற்படி உதவித் திட்டத்துக்கு லயன் மகேந்திரன் அனுசரணை வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நவராத்திரி விழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ் தானத்தின் நவராத்திரி விழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதியுடன் நிறைவு பெறவுள்ளது. இன்றைய தினம் காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள பூஜை நண்பகல் 12 மணிக்கு நவராத்திரி கும்பம் வைத்தலுடன் நிறைவுபெறவுள்ளது. நவராத்திரி பூஜையானது பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி இரவு 7 மணிவரை நடைபெறவுள்ளது.

விஜயதசமி விழாவானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதன்போது பூஜைகள் அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் முற்பகல் 11.30 மணிக்கு கேதார கௌரி விரத பூஜைகளும் இடம்பெறும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA VACANCIES

Applications are invited by me up to 17.10.2014 from suitably qualified persons for the following posts.

**1.ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION) (University of Jaffna)**

**Qualifications:**

Should possess a Bachelor of Law Degree from a recognized University/ HEI or Attorney-at-Law with not less than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/ Corporation or Reputed Private Sector Organization or official bar.

**Salary Scale** : U-EX 1(II) - Rs. 26,020 – 3x585 – 27,775 (EB) 28,420; 6x645; 6x585 – 35,800 p.m.

**Selection** : By Structured Interview.

**2.WORKSHOP ENGINEER GRADE III (University of Jaffna - Kilinochchi Premises )**

**Qualifications:**

a)Should possess a B.Sc. Engineering Degree specializing in Mechanical/ Production Engineering from a recognized University/ HEI.

**OR**

b)Should possess a National Diploma in Technology specializing in Mechanical/ Production Engineering or equivalent qualification, with at least seven (07) years of experience in Mechanical workshop of a recognized establishment.

**NOTE:** The in-plant training period shall not be counted for the period of experience.

**Salary Scale** : U-EX 1(II) - Rs. 26,020 – 3x585 – 27,775 (EB) 28,420; 6x645; 6x585 – 35,800 p.m.

**Selection** : By Structured Interview.

**3.UNIVERSITY MEDICAL OFFICER (University of Jaffna/ Vavuniya Campus/ University of Jaffna – Kilinochchi Premises)**

The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.

**NOTE:** One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting of study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale** : U- MO 1 (II) - Rs. 28,360 – 10 x 645 ; 1 x 790 – 35,600/- p.m.

**Selection** : By Interview.

**4.CURATOR (LANDSCAPE) GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

1. Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/ Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**OR**

2. Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/ Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale**: U- EX1 (II) -Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12X645 - 36,160/- p.m.

**Selection** : By Interview.

**5.MARSHAL GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

i.A Graduate from a recognized University

ii.Physique: Height : 5' 5"

Chest: 32" deflated

**Note**:- Preference will be given to those who show record of active participation in Sports Activities ,Social Welfare Activities within the University or at National Level and those who have a background of Police or Armed forces.

**Salary Scale** : U-MN 2 (II) - Rs.19,470 – 18 X 245 - 23,880/- p.m.

**Selection** : By Interview.

**6.SUPERVISOR (LANDSCAPE) GRADE III (Vavuniya Campus)**

**Qualifications:**

a) National Certificate in Technology or equivalent qualifications with 3 years experience that may be obtained while following the NCT course;

**OR**

b)G.C.E(Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with at least 5 years' experience as a Supervisor in the relevant field in a Government, Local Government or State Corporation or a recognized Engineering Establishment.

**Salary Scale**: U-MT1 (IIIA) - Rs.16,535 - 7x155; 10x185 - 19,470 p.m

**Selection** : By Interview

**7.PUBLIC HEALTH INSPECTOR GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Salary Scale** : U-MT 1 (III A) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.

**Selection** : By Interview

**8.PUBLIC HEALTH NURSE (University of Jaffna)**

**Qualifications:**

a)Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 12 years experience as a Nurse of which 8 years should be either in Student Health Service or Public Health Service in a recognized Institution.

**OR**

b) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 10 years experience as a Nurse and possessing post primary qualifications in any aspects of nursing.

**Salary Scale** : U-MT 1(II) - Rs. 18,360 – 7x185; 9x245 – 21,860 p.m.

**Selection** : By Aptitude Test and Interview

**9.NURSING OFFICER GRADE II (University of Jaffna/ Vavuniya Campus)**

**Qualifications:**

(i) GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.

**AND**

(ii) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.

**Selection** : By Aptitude Test and Interview

**10. RECORD KEEPER GRADE II (University of Jaffna)**

**Qualifications :**

i.Should have passed the G.C.E. (Ordinary Level) Examination in six subjects with 5 credits at not more than two sittings;

**AND**

ii.One year of experience in keeping records in a Record Room in the University System or Government Department/ State Corporation/ Recognized Institution.

iii. Good knowledge of Computer Literacy and Binding work.

**NOTE:** Preference will be given to those who have passed the GCE(A/L) examination in 03 subjects and have obtained the certificate issued by the Department of National Archives on completion of a 05 days course conducted for Record keeping.

**Salary Scale** : U-MN1 (IIIA) - Rs.16,070-17x155-18,705 p.m.

**Selection** : By Trade Test and Interview

**11. BOOK BINDER GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

Should have passed the 8th Standard and have at least 5 years' experience as a Book Binder in a recognized Institution;

**Salary Scale** :U-PL 3(III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m

**Selection** : By trade test and interview

**12. MASON GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

i.Pass in the 8th standard

ii.Should be conversant with – a.Brick work and the different types of courses used in the construction of wall footings, wall arches, taper pillars, chimneys, sewer chambers etc.;

b.All types of plaster, mixing and laying of reinforced concerted;

c.Reading plans and setting out foundations for simple constructions;

d.Colour washing including use of emulsion paint.

iii.Not less than 2 years' experience in masonry

**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m

**Selection** : By trade test and interview

**13. MECHANIC GRADE II (University of Jaffna/ University of Jaffna – Kilinochchi Premises)**

**Qualifications:**

i.Pass in the 8th standard

ii.Should be conversant with a.Reading scales, micrometers and recording fractional dimensions;

b.Specialized types of fitting of plant and machinery of steam, motor and diesel or the operation of workshop machinery such as lathes milling machines and shaping machines;

**and**

c. Reading and understanding drawings,

iii. Not less than 2 years' experience as a mechanic or machine Operator.

**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m

**Selection** : By Trade test and interview

**AGE LIMIT : Not more than 45 years for the above all posts.**

***Note: Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1.Allowances approved by the University Grants Commission.

2.Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.

3.Gratuity payment.

4.Employment trust fund.

5.Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non –Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.10.00 stamped envelope of 23x10cm. in size. Only Applications sent on the specified form will be accepted. (**Please annexed copies of relevant documents**)

Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

**REGISTRAR 19/09/2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் பங்காளியாகயிருப்பதில் எங்களுக்கு எந்தப்பயனுமில்லை

## இராதாகிருஷ்ணன் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

மலையகத்தில் பெருந்தோட்ட மக்களுக்கென நிர்மாணிப்பதற்கான வீடமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டில் 2 ஆயிரம் வீடுகளும் 2014 ஆம் ஆண்டில் 5 ஆயிரம் வீடுகளும் நிர்மாணிக்கப்படவிருந்த போதிலும் அத்திட்டம் கால்நடை வள' கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளரது கடிதத்தின் மூலம் நிறுத்தப்பட்டு விட்டதாக குற்றம் சாட்டி நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வி. இராதாகிருஷ் ணன் அத்திட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு அவருக்கு இருக்கும் அதிகாரம் தான் என்ன என்றும் கேள்வி எழுப்பினார்.

நாம் மலையகத்தின் தோட்டப் புறங்களிலிருந்தே இந்த பாராளுமன்றத்துக்கு வந்துள்ளோம். அரசாங்கத்திலும் பங்காளியாக இருக்கிறோம். அப்படியிருந்தும் எமது மக்களுக்காக வீடுகளைக் கூட பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் நாம் இந்த சபையில் இருப்பதிலோ அரசாங்கத்தின் பங்காளியாக இருப்பதிலோ எந்த அர்த்தமும் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிர்மாணத் தொழில் அபிவிருத்தி சட்ட மூலம் இரண்டாம் மதிப்பீட்டின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலையகத்திலே வாழும் எமது மக்களுக்காக வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பொருட்டு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் 2 ஆயிரம் வீடுகளும் 2014 ஆம் ஆண்டில் 5 ஆயிரம் வீடுகளும் நிர்மாணிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

எனினும் அத்திட்டம் கைவிடப்படுவதற்கு கால்நடை வள முகாமை அபிவிருத்தி அமைச்சே காரணமாகும். அவ்வமைச்சின் செயலாளரினால் அனுப்ப்பட்டிருந்த கடிதத்தின் காரணமாகவே இவ்வீடமைப்புத் திட்டம் தடுக்கப்பட்டது. அப்படி என்றால் அவருக்கு இருக்கும் அதிகாரம் என்ன?

இங்கு நான் அமைச்சரைக் குறை கூறவில்லை. இருந்த போதும்



அமைச்சொன்றின் செயலாளரால் அனுப்பப்பட்டிருந்த கடிதத்தை வைத்து இத்திட்டத்தை நிறுத்தியமையைத்தான் இங்கு கூறுகிறேன்.

நாம் தோட்டப்புறத்திலிருந்தே பாராளுமன்றத்துக்கு வந்திருக்கிறோம். அத்துடன் ஆளும் கட்சியின் பங்காளியாகவும் இருக்கிறோம்.

நாம் அரசாங்கத்தின் பங்காளியாக இருப்பதன் காரணத்தால் சில விடயங்களை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

நாம் அரசாங்கத்தின் பங்காளியாக இருந்தும் எமது மக்களுக்காக குடியிருப்புகளைக் கூட பெற்றுக்கொடுக்க முடியா விட்டால் நாம் இந்த சபையில் இருப்பதிலோ அல்லது அரசாங்கத்தின் பங்காளியாக இருப்பதிலோ எந்தவித பயனும் கிடையாது.

இதனை என்னால் எந்த இடத்திலும் கூற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஊவா மாகாண அமைச்சர்கள் 30ம் திகதி சத்தியப்பிரமாணம்

ஊவா மாகாண சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்கள் எதிர்வரும் 30ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வர் என தெரியவந்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் 69ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்க நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த இவ்வார இறுதியில் நாடு திரும்புகிறார். இதன் பின்னரே சத்தியப்பிரமாண நிகழ்வு ஜனாதிபதி காரியாலயத்தில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊவா மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சசீந்திர ராஜபக்ஷவை மீண்டும் அதே பதவியில் நியமிக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஏற்கனவே முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது. (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 120 |
| தக்காளி | 40 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 60 |
| கோவா | 60 | 80 | 60 |
| கரட் | 120 | 70 | 100 |
| பூசணி | 40 | 30 | 40 |
| புடோல் | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 80 | 50-100 |
| பெரிய வெங்காயம் | 60-90 | 100 | 70 |
| பாகற்காய் | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 120 | 90 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 40-100 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 20-50 | 80 | 80 |
| போஞ்சி | 160 | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 110-140 | 140 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 25-35 |
| இராசவள்ளி | 140 | 80 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 146

Search for people, places and things Nagendram Home

கிருஸ்ணசாமி சங்கீர்த்தனன்



எதிரிகளுக்கு எரிச்சல் வருகிறது என்றால் இலட்சியவாதிகளான நாம் சரியாக இருக்கிறோம் என்பதற்கான அடையாளம் அது!

-ஜென்னி மார்க்ஸ்

சுஜன் மகேந்திரன்




சஞ்சீவ் எஸ்எம்எஸ்


ஒரு அழகிய பெண் கண் இமைக்காமல் சில நொடிகள் உங்களை மட்டுமே உற்று பார்த்தால்...




அவளுக்கு குரு பெயர்ச்சியும் உங்களுக்கு சனி பெயர்ச்சியும் நடக்குது என்றே அர்த்தம்...

கரோலின் கெனி

கைப்பிள்ளை : எங்க ஆபிஸ்ல மனேஜர் இருக்காரு, கிளார்க் இருக்காங்க...
வேலு : இதெல்லாம் எதுக்கு எங்கிட்ட வந்து சொல்றீங்க?



கைப்பிள்ளை : நீங்கதானே படிச்சிட்டு யாராவது வேலையில்லாம இருந்தா சொல்லச் சொன்னீங்க.

ரத்தினசபாபதி பாலராஜா





ராகுலன் பாலா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அபிவிருத்தியில் இலங்கை - சீன ஒப்பந்தத்தின் தாக்கம்



இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் உலக நாடுகள் பல தமது தொழில்நுட்ப அறிவு, இயற்கைவளம், மணித வலு என்பவற்றினை சாதகமாக பயன்படுத்தி அபிவிருத்தி பாதையில் ஒன்றை ஒன்று முந்தி வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு இவ்வாறான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருந்த போதிலும் சில அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் தமது பொருளாதார வளத்தினை அதிகரித்து அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு இணையாக தாமும் போட்டியாக நின்று ஒரு கணம் திரும்பி பார்க்க வைக்கின்றன. அந்தவகையில் பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இருந்த போதிலும் சீனா தன்கென ஒரு இடத்தினை பெற்றுள்ளது என்பதனை எவரும் மறுக்க முடியாது. மிகக் கூடிய குடியடர்த்தினை தனது சுமை என்றும் பாராமல் மொத்த தேசிய உற்பத்தியினை அதிகரித்து ஆள்வீத வருமானத்தினையும் உயர்த்தி அபிவிருத்தி முன்னேற்றத்தினை உலக நாடுகளுக்கு தடம் போட்டு காட்டியுள்ளது.

### புராதன சீன- இலங்கை உறவு

மா ஒ சேதுங் காலத்தில் பல்வேறு புரட்சிகளை செய்து சீனப் புரட்சி என பரிணமித்து தனது அபிவிருத்தி பாதையினை ஆரம்பித்தது சீனா. புராதன காலத்திலே பட்டுப் பாதை என சிறப்பிக்கப்படும் ஆசிய, மத்தியகிழக்கு நாடுகளுக்கான பாதைவழியே பட்டுத்துணிகள் கொண்டு சென்று வியாபாரம் செய்த வரலாறும் சீனாவுக்குரியதாகும். அந்த வரிசையில் எமது நாட்டுடனும் சீனா வர்த்தக தொடர்பினை புராதன காலத்திலே வைத்திருந்துள்ளது. அக்காலத்தில் அவ்வாறு சீனாவுடன் வைத்திருந்த தொடர்புகளினால் இலங்கைக்கு ஏராளமான பொருட்களை (மட்பாண்டம், துணிவகை, வாசனை திரவியம் மிக குறைந்த விலையில் பெற்றுக் கொண்டது மட்டுமன்றி எமது நாட்டு பொருட்களை அவர்களும் மிக கூடியளவு விரும்பி கொள்வனவு செய்ததினால் உயர்வான பொருளாதார நிலையை அக்காலத்தில் எமது நாட்டிற்கும் எட்டியிருந்தது. பொருளாதாரத்துடன் மட்டும் நின்று விடாது சமய தொடர்புகளும் குறிப்பாக பௌத்த சமய தொடர்பு, உப சம்பதா சடங்கிற்காக பௌத்த துறவிகளின் வருகை என்பனவும் சீன- இலங்கை உறவினை புராதன காலத்தில் மேலும் வலுவூட்டியதாய் இருந்தது.

### ஆசியாவின் உறங்கும் இராட்சசன்

ஆசியாவில் மிகப்பெரிய சனத்தொகையினை கொண்ட நாடாக விளங்குவது சீனா. இன்று தனது மக்கள்பலம், இயற்கைவளம், நவீன தொழில்நுட்ப பயன்பாடு என்பவற்றினை தன்னகத்தே கொண்டு ஆசியாவில் மிக வேகமாக முன்னேறி வருவதினால் 'உறங்கும் இராட்சசன்' என வர்ணிக்கப்படுகின்றது. உலக வல்லரசு நாடுகளையே ஒருமுறை சிந்திக்க தூண்டும் விதத்தில் அச்சுறுத்தும் ஒரு நாடாகவும் சீனா வளர்ந்துள்ளது. இலங்கைக்கும் சீனாவிற்கும் தற்காலத்தில் நடைபெற்ற ஒப்பந்தங்கள் இலங்கையின் அபிவிருத்தி பாதையில் எவ்வளவு முன்னேற்றத்தினை கொண்டுவரப் போகின்றது என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும். இருந்த போதிலும் இலங்கை – சீன ஒப்பந்தங்கள் எமக்கு புதியவையும் அல்ல. 1952 இல் இலங்கை- சீனாவுக்கு இடையிலான இருபக்க வர்த்தக உடன்படிக்கையான அரிசி – இறப்பர் ஒப்பந்தம் இதற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. எமது நாட்டிற்கு நன் கொடையாக வழங்கிய **Bmich** (பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்) சீனாவின் உதவியினை மேலும் எடுத்துக்காட்டுகின்றது.

### இலங்கை- சீன ஒப்பந்தம்

28 வருடங்களின் பின்னர் இலங்கைக்கு தற்போது வருகை தந்த சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உடன் ஆசியாவின் அழகிய நகரமாக இலங்கையினை மாற்ற வேண்டும் எனும் திட்டத்தின் கீழ் இரு நாடுகளுக்குமிடையில் 27 இற்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

21 ஆம் நூற்றாண்டில் பட்டுப் பாதை திட்டத்தினை உருவாக்கும் சீனாவின் திட்டத்திற்கு இந்த உடன்படிக்கைகள் படிக்கல்லாக அமையவுள்ளன. இவ்ஒப்பந்தபரிமாற்றத்தில்

1. வர்த்தக கட்ட ஒத்துழைப்பு
2. உயர்கல்வி அபிவிருத்தி
3. நெடுஞ்சாலைத் துறை அபிவிருத்தி
4. மின் வலு அபிவிருத்தி
5. கலாசார அபிவிருத்தி
6. விவசாயம், கைத்தொழில் அபிவிருத்தி
7. தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளும் உள்ளடங்கும்.

### இருபக்க வர்த்தக ஒப்பந்தம் (FTA)

புராதனகாலம்தொட்டே இலங்கை – சீனாவுக்கு இடையில் வர்த்தக தொடர்புகள் இருந்துள்ளன. இலங்கை தனது மொத்த இறக்குமதி வீதத்தில் 14 % பொருட்களை சீனாவிடம் இருந்தே கொள்வனவு செய்கின்றது. இந்தியாவிற்கு அடுத்தபடியான வர்த்தக நாடாக இருந்த போதிலும் சீனா உலக சந்தையில் தனக்கென ஒரு தனி பெயரினையும் தக்க வைத்துள்ளது 1952 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒப்பந்தத்தினையும் இதற்கு உதாரணமாக கூறிக் கொள்ளலாம். இதன் ஒரு பரிமாணமாக தற்போதைய புதிய வர்த்தக உடன்படிக்கையானது இலங்கைக்கு பல்வேறுபட்ட சலுகைகளை பெறுவதற்கு வாய்ப்பாகவுள்ளது. 5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தக உடன்படிக்கை இரு நாடுகளுக்குமிடையில் தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ் வர்த்தக உடன்படிக்கை மூலமாக இலங்கையின் ஏற்றுமதிக்குபாரிய சந்தைவாய்ப்பு ஒன்றினை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இதன்மூலம் ஏற்றுமதி அதிகரிப்பதுடன் அதன்மூலம் கிடைக்கும் அதிகரித்த வருமானம் இலங்கையின் வர்த்தக நிலுவையில் சாதகமான நிலைமையினை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### உட்கட்டுமான பணிகள்

இலங்கைக்கு கிடைத்த பெரும்பாலான உட்கட்டுமான பணிகள் யாவும் சீன அரசாங்கத்தின் நிதி உதவியினைக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன. முன்னரும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. தெற்கு அதிவேக நெடுஞ்சாலையான கொழும்பு- கட்டுநாயக்க அதிவேக பாதை
2. மத்தள சர்வதேச விமான நிலையம்
3. அம்பாந்தோட்டை துறைமுகம்
4. நுரைச்சோலை அனல் மின் நிலையம்

போன்றவற்றினை உதாரணங்களாக குறிப்பிடலாம். இவற்றிற்கான நிதி சீனாவின் எக்ஸிம் வங்கி ஊடாக வழங்கப்படுகின்றது.

உலக நாடுகள் ஒவ்வொரு நாடுகளுக்கும் வழங்கும் கடன்களை



வட்டிக்கடன், வட்டியில்லா கடன் எனும் வகையில் வழங்கும் போது சீனாவினால் எமக்கு கிடைக்கப் பெற்ற இக் கடன்கள் யாவும் வட்டியற்ற நீண்ட முதிர்ச்சிக் காலத்தை கொண்டவையாகவுள்ளன.

நுரைச்சோலை அனல் மின் நிலையம் ஊடாக நாடளாவிய ரீதியில் அனைத்து பிரதேசங்களுக்கும் மின்சாரத்தை வழங்கும் நோக்குடன் மக்களின் மின்சார செலவினத்தை குறைத்தல், பிரதேச ரீதியாக காணப்படுகின்ற அபிவிருத்தி இடைவெளியை குறைத்தல் மற்றும் கிராமப்புற மக்களினது மின்சார தேவையினை நிறைவு செய்தல் போன்றவற்றினையும் இது குறிக்கோளாக கொண்டுள்ளது. நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்கு 16 வருடங்களுக்குமீளச் செலுத்தும் வகையில் 1346 மில்லியன் அமெரிக்க டொலர் சீனாவின் எக்ஸிம் வங்கியினால் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாதாந்தம் 540 மில்லியன் அலகு மின்சாரத்தினை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும்.

### பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவிகள்

உலகிலே பொருளாதார மற்றும் தொழில்நுட்பரீதியான வளர்ச்சிகண்டு வரும் சீனாவுடனான இவ் உடன்படிக்கை இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். இவ் ஒப்பந்தத்தின் கீழ் விவசாய உபகரணங்களை வழங்கல், மருத்துவ தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கல், அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்பங்களை வழங்கல், கரையோர சூழல் அபிவிருத்தியும் பாதுகாப்பும், சீன அக்கடமி மற்றும் உயர்கல்வி தர நிர்ணயம் போன்ற விடயங்கள் உள்ளடங்குகின்றன. அது மட்டுமன்றி இலங்கையில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்காக விஞ்ஞான நிலையம் ஒன்றினை அமைக்க சீனா விருப்பம் தெரிவித்துள்ளது.

புராதன காலத்திலிருந்த கலாசார தொடர்புகளை இலங்கை- சீனா பேணிவந்துள்ளதுடன் அவற்றினை தொடர்ந்தும் பேணும் வகையிலும் இலங்கையின் கலை கலாசார நடைமுறைகளை மேம்படுத்தவும் தாமரைத்தடாகம் எனும் மாநாட்டு மண்டபத்தினையும் அமைத்துக் கொடுத்துள்ளது.

### துறைமுக நகரம் (PORT CITY)

15 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பாரிய முதலீட்டுக்கான 233 ஹெக்டேயர் பரப்பளவினைக் கொண்ட மேற்கூறிய திட்டத்தின் மூலம் இலங்கையிலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு காணப்படுகின்றது. அது மட்டுமின்றி இலங்கையினது உல்லாச பயணத் துறையின் வளர்ச்சிக்கு இது பாரிய பங்களிப்பை செய்யும். மேலும் பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்ளவும் ஏதுவாக அமைகின்றது. இத்திட்டமானது 2022 ஆம் ஆண்டு பூர்த்தியாகும்போது இலங்கை பொருளாதாரத்தின் பிற்பட்ட காலப் பகுதியில் ஒரு அபிவிருத்தி வளர்ச்சியினை காணக் கூடியதாக இருக்கும். நவீன வசதிகளுடன் அமைக்கப்படும் பூங்காக்கள், நவீன பொழுது போக்கு அம்சங்கள், அதிசொகுசு விடுதிகள், மைதானம், காரியாலயங்கள், தொடர்மாடி வீடுகள் என்பவற்றை கொண்டமைந்ததாக இது இருக்கும். இந்தத் துறைமுக நகர அபிவிருத்திக்காக ஈடுபடுத்தப்படவிருக்கும் மொத்த ஊழியர்களில் 70 % மான ஊழியர்கள் இலங்கையிலிருந்தே பெற்றுக்கொள்ளப்பட போகின்றார்கள். இதன் மூலம் வேலை வாய்ப்புகளும் கிடைக்க சந்தர்ப்பமாக இது அமைகின்றது.

### இலங்கை - சீன மத்திய வங்கி ஒப்பந்தம்

இலங்கை – சீன மத்திய வங்கி ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை ரூபாவும் சீன யுவானும் வர்த்தக நடவடிக்கைகளின் போதும் மற்றும் இருதரப்பு உடன்பாட்டின் அடிப்படையிலும் ஏனைய தேவைகளுக்கும் பரிமாறிக்கொள்ள முடியும். இதன்மூலம் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற வர்த்தக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பாக இவ் ஒப்பந்தம் அமையும். சீன- இலங்கை மத்திய வங்கி ஒப்பந்தமானது 3 ஆண்டுகளுக்கு ஆகக் கூடியளவு 225 பில்லியன் ரூபாய் இலங்கை நாணயங்களையும் 10 பில்லியன் சீன யுவான் நாணயங்களையும் கைமாறிக் கொள்ள உதவுகின்றது.

இவ்வாறான இலங்கை – சீன ஒப்பந்தம் இலங்கையினை பொறுத்த வரையில் பல்வேறு நன்மைகளையும் பொருளாதார முன்னேற்றத் தினையும். தரப்போகின்ற போதும் பாதகமான பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்க வேண்டிய விடயங்களும் காணப்படவே செய்கின்றன. இவற்றுள் பலராலும் முக்கியமாக பேசப்படுவது இலங்கையின் கடன்சுமை இதனால் மேலும் அதிகரிக்கவே செய்யும் என்பதாகும். அத்துடன் தென்னாசியாவில் தனது ஆதிக்கத்தினை நிலை பெற செய்வதற்கு இலங்கையினை ஒரு தளமாக கொண்டு சீனா இயங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் நிரந்தர அங்கத்துவத்தினை பெற்றுக்கொண்ட சீனா தனது பொருளாதார வளத்தினை மேலும் பலப்படுத்தி கொள்ளவே முயன்றும் வருகின்றது. இதற்காக பல நாடுகளை தனது அதிகாரத்தினுள் வைத்துக்கொள்ள மேற் கொள்ளும் நடவடிக்கைகளில் இலங்கையும் சிக்கி விடுமா என்பது பல அறிஞர்களின் கருத்தாகவும் உள்ளது. இவ்வாறு இலங்கையுடன் வைத்துக்கொள்ளும் உறவு மேற்கத்தேய நாடுகளின் ஆதரவினை இலங்கை இழக்க நேரிடும் என்ற கருத்துக்களும் கூறப்படுகின்றன.


எவ்வாறு இருப்பினும் சீனாவிடமிருந்து இலங்கைக்கு கிடைக்கும் உதவிகள் சிறந்த முறையில திட்டமிடப்பட்டு எதிர்கால இலக்கு, எதிர்கால விளைவு என்பவற்றினை கருத்தில் கொண்டு சிறப்பான முறையில் முகாமைப்படுத்துவதன் மூலமே குறித்த இலக்கை நாம் எட்ட முடியும். உலக நாடுகள் ஒன்றில் ஒன்று தங்கியிருக்க வேண்டிய கட்டாயம் மாறும் உலகத்திற்கு தேவையான ஒன்றாகஇருப்பதனால்சீன-இலங்கை உறவினால் எமது நாடு ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக மாறும் என்றால் (அபிவிருத்தியில்) அது இலங்கை வாழ் மக்களது சிறப்பான எதிர்காலமாகவே அமையும்.

**சிவசுப்பிரமணியம் சிவசங்கர்**
**ஆசிரியர்**
**யாழ்/ வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

933




## 09.2014 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1513-ஸ்பானிய நாடுகாண் பயணி பாஸ்கோ நூனியெத் தே பால்போவா பசுபிக் பெருங்கடலை முதன் முதலில் கண்ட ஐரோப்பியர்.
- 1690-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்திப் பத்திரிகை (Publick Occurrences Both Foreign and Domestick) முதலும் கடைசித் தடவையுமாகவும் வெளி வந்தது. இது அரசினால் தடை செய்யப்பட்டது.
- 1789-அமெரிக்கக் காங்கிரஸ் அரசியலமைப்பிற்கு மனித உரிமைகளுக்கான 10 திருத்தங்கள் உட்பட 12 திருத தங்களைக் கொண்டு வந்தது.
- 1846 - ஐக்கிய அமெரிக்கப் படைகள் சாச்செரி டெய்லர் தலைமையில் மெக்சிக்கோவின் மொண்டெரே நகரைக் கைப்பற்றினர்.
- 1906 -கரையிலிருந்து படகை வழி நடத்தும் முறை ஸ்பெயினில் இயக்கிக் காட்டப்பட்டது. இதுவே தொலை இயக்கியின் பிறப்பு எனக் கருதப்படுகிறது.
- 1956 -அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்த முதலாவது தொலைபேசிக் கம்பித்திட்டம் TAT-1 நிறுவப்பட்டது.
- 1957 - ஐக்கிய அமெரிக்காவில் ஆர்கன்சஸ் மாநிலத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 9 கருப்பின மாணவர்கள் 300 இராணுவத்தினர்களின் பாதுகாப்புடன் பாடசாலை சென்றனர்.
- 1962 - அல்ஜீரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1983 - வட அயர்லாந்தில் 38 ஐரியக் குடியரசு இராணுவக் கைதிகள் சிறையை உடைத்து தப்பினர்.

### பிறப்புகள்

- 1897-வில்லியம் ஃபாக்னர், அமெரிக்க எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1962)
- 1899 - உடுமலை நாராயணகவி, தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், நாடக எழுத்தாளர் (இ. 1981)
- 1968 - வில் ஸ்மித், அமெரிக்க ராப் இசைப் பாடகர்
- 1976 - சான்சி பிலப்ஸ், அமெரிக்காவின் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்


- 1978 - ருக்மணி தேவி, சிங்களத் திரைப்பட நடிகை (பி. 1923)
- 1986 - நிக்கலாய் செமியோனொவ், ரஷ்ய வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1896)
- 2003 - எட்வர்ட் செயிட், ஆங்கில ஒப்பாய்வுத்துறை அறிஞர் (பி. 1935)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்



...அணியின் நன்மைக்குத்தானே செய்கிறோம் என்று சச்சின் நினைக்க நமக்கு சொல்லித் தரும் அளவிற்கு இவனுக்கு இருக்கும் ஆணவத்தைப் பார் என்று மனதுக்குள் மற்றவர்கள் பொருமத் தொடங்கினர். ஆரம்பத்தில் அணியில் ஒரு விளையாட்டு வீரனாக இருந்தபோது ஏனைய வீரர்களிடம் கிடைத்த அன்பும் வரவேற்பும் கேப்டனாகப் பதவி ஏற்றுக்கொண்ட பின்பு படிப்படியாக மாறிக்கொண்டு வருவதை சச்சின் உணர்ந்தார். இந்தக் கேப்டன் பதவி தனக்கும் வீரர்களுக்கும் மிகப் பெரிய இடைவெளியை ஏற்படுத்தும் என்று சச்சின் எதிர்பார்க்கவே இல்லை. தனக்கும் மற்ற வீரர்களும் இடையே கேப்டன் பதவி பெரிய சுவராக எழும்பிவிட்டதாக சச்சின் கருதியதில் வியப்பேதும் இல்லை.

மேற்கு இந்தியத் தீவுகள் சுற்றுப் பயணத்திற்கு முன்பு நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சச்சினுக்கு அழைப்பு வந்தது. தனக்குத் தேவையான வீரர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள சச்சின் இதை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள எண்ணினார். கிரிக்கெட் வாரியத்தின் சுயரூபம் என்னவென்று கூட்டத்தின்போதுதான் சச்சின் தெரிந்து கொண்டார். கூட்டம் ஆரம்பித்த அரைமணி நேரத்திலேயே சச்சின் புயலென வெளியே வந்துவிட்டார். அந்த சம்பவத்தின்போது அருகில் இருந்த சச்சினின் நெருங்கிய நண்பரும் செய்தியாளருமான ஒருவரிடம் சச்சின் புலம்பித் தள்ளிவிட்டார். அங்கு நடத்தவற்றை அந்த நண்பர் சொல்லக் கேட்போம்: கூட்டம் ஆரம்பித்த உடன் அணியின் கேப்டன் என்ற முறையில் எனது கருத்துக்களை நான் கூறத் தொடங்கினேன்.



### அதிகாரம் இல்லாத கேப்டன் பதவி!

இந்தியா ஜெயிக்க வேண்டுமானால் எனது அணியிலிருக்கும் வீரர்களைத் தேர்வு செய்யும் உரிமை எனக்கு இருக்கிறது. வீரர்களைத் தேர்வு செய்யும் முன்பு என்னையும் கலந்து ஆலோசிக்க வேண்டும். அனுபவம் மிக்க வீரர்கள் அனைவரும் ஓய்வு பெற்றுவிட்டனர். நான், அசார், கும்ப்ளே, வெங்கடேஷ் பிரசாத் மற்றும் ஸ்ரீநாத் ஆகியோரைத் தவிர ஏனையோர் புதியவர்கள். மேற்கு இந்திய மைதானங்கள் வேகப் பந்து வீச்சுக்குச் சாதகமானவை. எனவே, வேகப் பந்து வீச்சாளர்கள் மற்றும் நன்கு பேட்டிங் செய்பவர்கள் எனது அணியில் இருந்தால் மட்டுமே வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கும் என்று எனது பக்கத்திலிருந்த நியாயத்தையும் கூறினேன். ஆனால், அவர்கள் நான் பேசியதைக் கேட்காமல் தங்களுக்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார்கள். நான் சொன்னவை எதுவுமே அவர்கள் காதில் ஏறியதாகவே தோன்றவில்லை. பொறுத்துப்பார்த்த எனக்கு இது பெருத்த அவமானமாகவே பட்டது. நான் சொல்வதை எதுவுமே கேட்காத பட்சத்தில் என்னை ஏன் கூட்டத்திற்கு அழைக்க வேண்டும். ஏற்கனவே பட்டியல் தயாரித்து அணியில் இடம்பெற வேண்டிய வீரர்களின் பெயர்களைத் தேர்வு செய்துவிட்ட பின்பு ஏதோ ஒப்புக்கு சப்பாணியாக என்னை அழைத்து அவமதிக்க வேண்டாம்.

தனக்குத் தேவையான வீரர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள சச்சின் இதை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள எண்ணினார். கிரிக்கெட் வாரியத்தின் சுயரூபம் என்னவென்று கூட்டத்தின் போதுதான் சச்சின் தெரி ந்து கொண்டார். கூட்டம் ஆரம்பித்த அரைமணி நேரத்திலேயே சச்சின் புயலென வெளியே வந்துவிட்டார்!

கே.ரமேஷ்

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 20

### கவனத்தேவையை விட்டுவிடுதல்

..நாம் கிட்டத்தட்ட ஒரு பூரானைப்போல ஆகிவிட்டோம். பூரான் நடப்பதற்கு 100 கால்கள் தேவை. அதேபோல், நாமும் வாழ்வில் நடப்பதற்கு ஒரே சமயத்தில் அனைவரின் அங்கீகாரமும் தேவைப்படுகிறது. பூரானின் ஒரே ஒரு கால் சரியில்லையென்றால் கூட என்னவாகும்? அது திக்கற்று அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கும்.

நமக்கும் ஒரே ஒரு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றால்கூட என்ன நடக்கிறது? நாம் மனச் சோர்வில் விழுந்துவிடுகிறோம்.

நாம் அதிகமாக மற்றவர்களைச் சார்ந்து இருப்போமானால் மனச் சோர்வில் விழும் வாய்ப்புகளும் மிக அதிகம். மனச் சோர்வினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள், உண்மையில் கவனத்தேவையால்தான் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். காலப்போக்கில், ஏதோ நிகழ்ந்து, அவர்களுக்குப் போதுமான கவனம் கிடைக்கவில்லை. இதை அவர்களால் கையாள முடியவில்லை. நம்மை மனச்சோர்வில் தள்ள ஒரே ஒரு வார்த்தை போதுமானது. ஆனால், நமது மனச்சோர்வுக்கான உண்மையான காரணம் நமக்குத் தெரிவதில்லை. ஆனால், நாம் என்ன செய்கிறோம்? அதைக் குணப்படுத்துவதற்காக மருந்துகளைச் சாப்பிடத் தொடங்கிவிடுகிறோம்.

அது எவ்வாறு குணப்படுத்தும்? மனச்சோர்வின் காரணம் உங்களுக்குள் இருக்கிறது. ஆனால், நீங்கள் உதவிக்கு மருந்துகளைத் தேடுகிறீர்கள். என்னிடம் மக்கள் மனச் சோர்வுடன் வரும்



பொழுது நான் [illegible] முடியும். அவர் மஹா மந்திர [illegible] எவ்வளவு மனப்பூர் சொல்கிறேன். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மருந்துகளை நிறுத்திவிடலாம்.

பாருங்கள், இவர்களுக்கு இவர்களது சக்தியின் மூலம் இவர்களுக்குள்ளேதான் இருக்கிறது என்பதைக் காண்பிக்க வேண்டியதிருக்கிறது. அதை வமாக செய்கிறார்கள் என்பதைப் பொறுத்து, உள்ளிருக்கும் சக்தியைப் பயன்படுத்தி, மனச்சோர்விலிருந்து வெளிவர முடியும். மருந்துகள் அவர்களை மேலும் மந்தமாக்கிவிடும்; இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நீங்கள் உங்கள் சக்தியை வெளியிலிருந்து பெறும்பொழுது அது உங்களிடம் பெரும் சேதத்தை விளைவிக்கலாம். நீங்கள் ஒரு வெறும் பொம்மையைப் போல ஆகிவிடுவீர்கள் என்று சாமி சொல்கிறேன்.


சாமி உங்களுக்கு ஒரு சின்னகதை சொல்கிறேன்: அது உண்மையில் சிகாகோ பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆராய்ச்சியாகும். ஆரோக்கியமான, அறிவுள்ள இளைஞன் ஒருவன் வேலைக்குச் செல்லத் தயாராகிறான். அவனுடைய மனைவி அவனைப் பார்த்துச் சொல்கிறாள், நீங்கள் சோர்வாக காணப்படுகிறீர்கள்; நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா? அவளது விமர்சனத்தால் எரிச்சலைடைந்த அவன், அவளது கற்பனைகளை நிறுத்திக்கொள்ளச் சொல்லி விட்டுச் செல்கிறான்....

பரமஹம்ஸ சுவாமி

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளை சூழல் நல் இசைவாக்கம் பெற்ற நட்பார்ந்த பாடசாலைகளாக மாற்றுவோம்



**கல்வித் தரிசனம்**

இரண்டு நபர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கும் போது நண்பர்களாக மாறுகின்றனர். நாம் ஒருவரை ஒரு வர் நேசிப்பது போல சூழலையும் நேசிக்க வேண்டும். அப்போது தான் நாம் சூழலின் நண்பர்களாக மாறுவோம். சூழலும் நம்மை நேசித்து நம்மைப் பாதுகாக்கும்.

இன்றைய மனிதனின் செயற்பாடுகள் சூழலை பாதுகாப்பதற்கு பதிலாக சூழலை அழிவிற்கே கொண்டு செல்வதாக தெரிகிறது. அதற்குரிய பிரதிபலனை சூழல் எமக்கு சூறாவளியாக, வெள்ளப் பெருக்காக, சுனாமியாக, எரிமலையாக, கடும் வரட்சியாக தந்து விடுகின்றது.

எனவே நாம் எதிர்காலத்தில் இவ் அழிவுகளிலிருந்து எமது பூமி கிரகத்தை பாதுகாக்க வேண்டுமெனில் நாம் சூழலின் நண்பர்களாக (Ecofriend) மாற வேண்டும்.

இதற்காகத்தான் ஐக்கிய நாடுகள் சபை 1992 ஆம் ஆண்டு சுற்றுச் சூழல் அபிவிருத்தி மாநாட்டை பிரகடனம் செய்தது. இம் மாநாட்டில் உலக நாடுகள் அனைத்தும் கலந்து கொண்டன. இதில் சுற்றுசூழல் கல்வியை உலகின் எல்லா நிலைகளிலும் கொண்டு வரவேண்டும் என உறுதி எடுக்கப்பட்டது. இக்கல்வியானது முக்கியமாக பாடசாலை, தொழில்நுட்ப கல்லூரி, பல்கலைக் கழகம் போன்ற கல்வி நிறுவனங்களில் கட்டாயமாக கற்பிக்க வேண்டும் என அந்த மாநாட்டில் கொள்கை ஒன்றை பிரகடனப்படுத்தியது. அக் கொள்கையானது நேற்றைய இயற்கை அழிவிலிருந்து உலகை மீட்டெடுத்து இன்றைய இயற்கை அழிவுக்கு உலகை பாதுகாத்து நாளைய அல்லது எதிர்கால உலகில் இயற்கை வளங்களால் மனித சமுகத்திற்கு கிடைக்கும் நன்மைகளில் பற்றாக்குறை ஏற்படா வண்ணம் சமாளிக்க சுற்றுச் சூழல் கல்வியாக மாணவருக்கு வழங்க வேண்டும் என எடுத்துரைக்கின்றது. ஏனெனில் ஒரு சமூகத்திற்கான மாற்றங்கள் பாடசாலை களிலிருந்தே உதயமாக வேண்டும்.

பாடசாலைகள் இன்று பிள்ளை நேயம் மட்டுமன்றி இயற்கையை நேசிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உலகில் இன்று சூழல் பிரச்சினைகள் மிகவும் அதிக கவனயீர்ப்பை பெற்று வருகின்றன. எமது பாடசாலைகளிலும் தற் போது திண்மக்கழிவுகளை முகாமை செய்வதில் பெரும் நெருக்கடி தோன்றியுள்ளது. இவ்வாறான திண்மக் கழிவுகள் இரண்டு வகைப்படும்.

1. உக்கலடையும் கழிவுப் பொருட்கள் (சிதிலமடையும்)
2. உக்கலடையாத கழிவுப் பொருட்கள் (சிதிலமடையா)

எமது பாடசாலையில் உக்கலடையும் சேதனக்கழிவுகளாக மரங் களின் இலைகள், மாணவர்களால் கைவிடப்படும் கடதாசிகள், பாட சாலை மதிய உணவு தயாரித்தலினால் உருவாகும் சமையலறைக் கழிவுகள், தகரப் பேணிகள், விலங்கு கழிவுகள் என்பவற்றை குறிப்பிடலாம். உக்கலடையாத கழிவு பொருட்களாக பிளாஸ்டிக், பேனாக்களின் பாகங்கள், பிளாஸ்டிக் பாத்திரங்கள், பொலித்தீன் உறைகள், கண்ணாடித்துண்டுகள் மற்றும் இலத்திரனியல் கழிவுகளான பழுதடைந்த கணனிகள், இரச மின்குமிழ்கள் (CFL), ஆய்வுகூட கழிவுப் பொருட் கள் பழுதடைந்த கைத்தொலை பேசிகள் என்பவற்றை குறிப்பிடலாம். இவற்றிலுள்ள இரசாயனச் சேர்வைகள் தரையை அடைந்து தரைகீழ் நீரின் மூலம் மனிதனை பாதிப்படையச் செய்கின்றது.

எமது பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் சூழல் நிலைமைகளை பார்க்கும் போது சூழல் பற்றி நட்பார்ந்த ரீதியில் சிந்திக்கும் ஒவ்வொரு சகோதரனும் வேதனையடைவான் என்பது உண்மை. பாடசாலைகளில் காணப்படும் பொலித்தீன், பிளாஸ்ரிக், சேதனக் கழிவுகளெல்லாம் டெங்கு ஒழிப்பு வாரம் என்ற போர்வையில் ஒன்று சேர்த்து எரியூட்டப்படும் காட்சியைத் தான் எமது அன்றாட சூழலிலும் தொலைக் காட்சி செய்திகளிலும் காணக்கூடியதாக உள்ளது. டெங்கு ஒழிப்புக்காக இக்கழிவுகளை இல்லாது ஒழித்தல் சுகாதாரமானது என்றாலும் இக் கழிவுகளை எரிக்கும் போது வெளியேறும் புகையில் காணப்படும் காபனீரொட்சைட், காபனோர் ஒட்சைட், கந்தகவீரொட்சைட், நைதரசனீர் ஒட்சைட் போன்ற வாயுக்கள் எமது வளி மண்டலத்தை சென்றடைந்து அதன் நூற்றுவீத வாயுக்களின் அமைப்பை மாற்றி விடுகின்றது. இதன் பிரதிபலன்களைத் தான் இன்றும் இன்னும் சிறிது காலத்திலும் புவி வெப்பமாதல், அமில மழை என்பவைகளாக நாம் அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையாகும். மற்றும் பாடசாலைகளில் கூட்டெரு தயாரிப்பதற்காக ஒயில் கொள்கலன் திட்டம் (Oil Drum Method) மூலம் வழங்கப் பட்ட பிளாஸ்ரிக்கிலான பச்சைநிற கொள்கலன்கள் கூட அதன் நோக்கத்தை இழந்து கவனிப்பாரின்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக உடைந்த நிலையில் கைவிடப்பட்டு காணப்படுகின்றது.

இது பாடசாலையில் ஆசிரியர்கள் மாணவர் மத்தியிலும் அப்பாடசாலை அமைந்துள்ள சமூகத்தில் சூழல் தொடர்பான விழிப்புணர்வு இன்னமும் ஏற்படவில்லை என்பதை கோடிட்டு காட்டுகின்றது. சில நகர்ப்புற பாடசாலைகளில் இத்திட்டமானது நன்றாக நடைமுறைப்படுத்தப்படுவதும் பாராட்டத்தக்கது.

பாடசாலையில் காணப்படும் திண்மக்கழிவுகளை சூழலுக்கு தீங்கில்லாமல் பயனுள்ள வழிகளில் எம்மால் மாற்றியமைக்க முடியும். இவை கழிவு முகாமைத்துவத்தில் 3R கொள்கை என அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. அவை பின்வருமாறு,

1. கழிவுகளை குறைத்தல் (Reduce)
2. கழிவுகளை மீளப்பயன் படுத்தல் (Reuse)
3. கழிவுகளை மீள செயற்பாட் டிற்குட்படுத்தல் (Recycle)



பாடசாலையினுள் மாணவர்கள் உக்கலடையாத கழிவுகளை மேலுள்ள மூன்று முறைகளினால் குறைக்க முடியும். இதற்கு ஆசிரியர்கள் மாணவருக்கு வழிகாட்ட வேண்டும். உக்கலடையாத கழிவுப் பொருட்களுக்கு பதிலாக இயற்கையாக கிடைக்கும் மூலப்பொருட்களால் செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்த வேண்டும். இதற்காக பனை ஓலையால் செய்யப்பட்ட பாய், கூடை, உறைகள் என்பவற்றை குறிப்பிடலாம். இலங்கையில் மீளப் பயன் படுத்தலை ஏற்படுத்துவதற்காக இலங்கையின் மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை சிறந்த திட்டங்களை முன்னெடுத்துள்ளது. இவர்கள் பாடசாலைகளிலும் கழிவுகளை ஒன்று சேர்க்கும் நிறப்பெட்டிகளை அறிமுகம் செய்ய வேண்டும். நீல நிற பெட்டிகளில் உக்கும் சேதனக் கழிவுகளையும், சிவப்பு நிறப்பெட்டிகளில் கண்ணாடி கழிவுகளையும், செம்மஞ்சள் நிற பெட்டிகள் பொலித்தீன், பிளாஸ்ரிக்கிலான கழிவுகளையும் கபில நிறப் பெட்டிகளில் தகரத்திலான கழிவு பொருட்களையும் இடுவதற்கு மாணவரை பழக்குதல் வேண்டும்.

இங்கு காணப்படும் சேதனக் கழிவுகளை கூட்டெருவாக மாற்றி பாடசாலைத் தோட்டத்திற்கு சேதன பசளையாக இடலாம். அல்லது அவற்றை விற்பனை செய்து பாடசாலைக்கு வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும். மற்றும் பாடசாலை மரக்கறி தோட்டத்துடன் பாடசாலைக்கு வருமானத்தை ஈட்டித்தரும் ஆடு, மாடு, கோழி போன்ற விலங்குகளை வளர்த்து ஒருங்கிணைந்த பண்ணை முறையை பாடசாலையில் அறிமுகப்படுத்தலாம். இங்கு பயிர் கழிவுகளை விலங்குகளுக்கு உணவாகவும் விலங்கு கழிவுகளை கூட்டுப்பசளையாக்கி பயிர்களுக்கு சேதன உரமாகவும் பயன்படுத்தலாம். மேலும் உயிர் வாயுவை தயாரித்து பாடசாலை மதிய உணவு தயாரித்தலுக்கு பயன்படுத்தலாம். இதனால் பாடசாலை தோட்டங்களில் இரசாயன உரப்பாவனையை பாடசாலையில் குறைக்க முடியும். பயிற்செய்கை முறைகள் மூலமும் இயற்கை பூச்சி நாசினியின் மூலமும் பூச்சி பீடைகளை கட்டுப்படுத்தலாம்.

பொலித்தீன் பிளாஸ்ரிக்கிலான கழிவுப் பொருட்களை மீண்டும் பயன்படுத்தல் தத்துவத்தின் அடிப்படையில் அலங்காரப் பொருட்களாக மாற்றி பயன் உடையதாக் கலாம். மற்றும் உடைந்த பிளாஸ்ரிக்கலான பாத்திரங்களில் மண்ணை நிரப்பி அலங்காரத் தாவரங்கள், மருத்துவ தாவரங்கள் வளர்க்க பயன்படுத்தலாம் அல்லது இவற்றை மீள் சுழற்சிக்குட்படுத்தும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு விற்பனை செய்து பாடசாலைக்கு மேலதிக வருமானத்தை தேடிக்கொள்ள முடியும். அத்துடன் டெங்கு போன்ற நோய்த்தாக்கத்திலிருந்தும் மாணவர்களை பாதுகாக்க முடியும். மேலும் பழுதடைந்த மரத்தளபாடங்களை திருத்தி மீளப்பயன்படுத்தும் போது பாடசாலையில் போதிய இடவசதியையும் ஏற்படுத்தலாம். பாடசாலைகளில் மதிய உணவு தயாரித்தலுக்கு தேவையான விறகு வகைகளை பெறுவதற்காக பாடசாலைக்கு சொந்தமான தரிசு நிலங்களில் வேகமாக வளரும் இபில் இபில், கிளிசரிடியா போன்ற தாவரங் களை பயிரிட்டு விறகுக்கு பயன்படுத்த வேண்டும். இலைகளை விலங்கு களின் உணவாகவும் பசளையாக வும் பயன்படுத்தலாம்.


பாடசாலைக்கு தேவையான கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக அப்பகுதியிலுள்ள மரங்களை வெட்ட நீங்கள் தீர்மானித்தால் அதற்காக பதில் தாவரங்களை வளர்க்க வேண்டும். பாடசாலை வேலிகளுக்கு வேகமாக வளரும் கிளிசரிடியா போன்ற தாவரங் களை உயிர் வேலியாக (Life Fence) பயிரிடவேண்டும். இவை ஆடு, மாடு போன்ற விலங்குகளுக்கு உணவாகவும், பசுந்தாள் பசளையாகவும் பயன்படுத்தலாம். இவ் வகையான அறிவையும் திறனையும் மாணவர்களுக்கு வழங்க ஆசிரியர்களும் சமூகமும் வழிகாட்ட வேண்டும். எமது நாட்டின் கல்விச் சீர்திருத்தத்தில் காணப்படும் செயற் பாட்டு முறைமைகள் இத்திறனை வளர்ப்பதையே சுட்டிக்காட்டுகின்றன.

தற்போது நடைமுறையிலுள்ள மகிந்த சிந்தனையும் மாணவர்கள் திறன் அடிப்படையில் அமைந்த தொழில்நுட்ப அறிவை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதையே குறித்து நிற்கின்றது. பாடசாலைக் கல்வியூடாக சுற்றுச் சூழல் பாதுகாப்பு அறிவை மாணவருக்கு ஊட்ட வேண்டும். இவற்றிற்காக விஞ்ஞானம், விவசாயம், மனைப் பொருளியல், சுகாதாரமும் உடற் கல்வியும், தொழில்நுட்பம் போன்ற பாடங்களை செயற்படுத்தலாம். பாடசாலையில் காணப்படும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு கழகங்களை உருவாக்கி தனது செயற்பாடுகளை முன்னெடுத்து செல்ல மன்றங்கள், போட்டிகள் என்பவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும். சுற்றுசூழல் ஆர்வலர்களைபாடசாலைக்கு வரவழைத்து காலைக் கூட்டங்களில் சிறப்புரை நடத்தி மாணவருக்கு அறிவூட்ட வேண்டும். வருடத்திற்கு ஒரு தடவையாவது சுற்றாடல் தினத்தை ஒழுங்குபடுத்தி மரநடுகையை மேற்கொள்ள வேண்டும். பாடசாலை நிர்வாகம் ஆண்டுத்திட்டம், ஐந்தாண்டுத் திட்டங்களை தயாரிக்கும் போது சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கு முன்னு ரிமை வழங்க வேண்டும். ஏனெனில் ஒரு பாடசாலையின் சுற்றுச்சூழல் அழகானதாகவும் சுத்தமானதாகவும் அமையும் போது தான் அது சிறந்த கற்றலுக்கான இடமாக மாறுகின்றது. எனவே நாம் மட்டும் இவ்வுலுகில் வாழ்ந்தால் போதும் என்ற சிந்தனையை விட்டுவிட்டு எமது குழந்தைகளும் எதிர்காலத்தில் சந்தோசமான வாழுமிடமாக இப் பூமியை மாற்றமடைய வைக்க சூழல் நண்பர்களாக பாடசாலையிலும் சூழலிலும் ஒன்றி ணைந்து செயற்பட முன்வருவோம்.

**ஜி.சி.மெல்வின் குருஸ்**
ஆசிரியர்,
மன்/நானாட்டான் ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைக் கருவிகளை ஏற்றுமதி செய்கிறது சீனா!



(பீஜிங்)

உலகெங்கிலும் பொலிஸ்படைகள் ஆட்களை சித்திரவதை செய்வதற்குப் பயன்படுத்தும் கருவிகளை தயாரித்து ஏற்றுமதி செய்வதாக சீனக் கம்பனிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட 130 கம்பனிகள், பெரும்பாலும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் முட்கள் கொண்ட உலோகத் தடிகள், பெருவிரல்களைப் பூட்டும் விலங்குகள், கழுத்தையும் கைகளையும் சேர்த்துக் கட்டும் கருவிகள் போன்ற சித்திரவதை ஆயுதங்களை தயாரிப்பதாக அம்னஸ்டி இன்டர்நஷனல் கூறுகின்றது.

சில கருவிகள் பொலிசாரின் சட்டரீதியான தேவைகளுக்குப் பயன்பட்டாலும் ஏனையவை கொடூரமான சித்திரவதைகளுக்கே பயன்படுபவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆபிரிக்காவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் மோசமான மனித உரிமைச் சூழலைக் கொண்டுள்ள நாடுகளே பெரும்பாலும் இந்த கருவிகளை வாங்குவதாகவும் அம்னஸ்டி இன்டர்நஷனல் கூறுகின்றது. (இ)

# குழந்தையின் மூக்கை பதம்பார்த்த மரக்குச்சி

குழந்தையொன்றின் நாசித்துவாரத்துக்கூடாக 3 அங்குல நீளமுடைய மரக்குச்சியொன்று சென்றதால் அக்குழந்தை உயிராபத்தை எதிர்கொண்டுள்ளது. சீனாவின் ஹுபாய் மாகாணம், வுஹானைச் சேர்ந்த ஹங் சியெங் என்ற 2 வயது குழந்தையே இத்தகைய விபரீத சம்பவத்தை எதிர்கொண்டுள்ளது.

குழந்தையின் நாசித்துவாரத்துக்கூடாக சென்ற மரக்குச்சியானது குழந்தையின் மூளையையும் ஊடுருவி சென்றுள்ளது.

இந்நிலையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் குழந்தையை பெற்றோர்கள் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

நான்கு மணித்தியால சத்திரசிகிச்சையின் பின்னர் மரக்குச்சியை வைத்தியர்கள் அகற்றியுள்ளனர்.

குழந்தையின் மூளையை ஸ்கான் செய்து பார்த்தபோது மரக்குச்சி மூளையை ஊடறுத்து நின்றமை தெரியவந்தது. ஆனாலும் குழந்தையின் மூளையில் பெரியளவில் பாதிப்புகள் இல்லை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (இ)




# விமானத்தினது கதவினை நடுவானில் திறக்க முயற்சி

## பயணியின் நடவடிக்கையால் பெரும் பரபரப்பு

அமெரிக்க போஸ்டன் நகரிலிருந்து லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு கடந்த திங்கட்கிழமை பயணித்த வேர்ஜின் அமெரிக்கா விமானமானது பயணியொருவர் விமானத்தின் கதவை திறக்க முயற்சித்ததால் அவசர கால நிலைமையின் கீழ் நெப்ராஸ்கா மாநிலத்திலுள்ள ஓமாஹா நகரில் தரையிறக்கப்பட்டது.

கலிபோர்னியாவைச் சேர்ந்த டக் அடம்ஸ் என்பவரே நடுவானில் பறந்து கொண்டிருந்த விமானத்தின் கதவை திறக்க முயற்சித்துள்ளார்.

வைத்தியசாலையில் நோயாளர்களை அடையாளம் காண்பதற்கு பயன்படும் பட்டியை அணிந்திருந்த அந்நபர் தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டும் பிறிதொரு பயணியொருவருடன் விவாதத்திலும் ஈடுபட்டதை தொடர்ந்தே அவர் விமானத்தின் கதவை திறக்க முயற்சித்துள்ளார்.

ஓமாஹா விமான நிலையத்தில் விமானம் தரையிறக்கப்பட்டதையடுத்து டக் அடம்ஸ் கைது செய்யப்பட்டு அழைத்துச்செல்லப்பட்டார். (இ)

# ஓவியப் பெண்



ஆய கலைகள் 64 என்பார்கள். ஒரு விடயத்தை அழகுடனும் நேர்த்தியுடனும் பார்ப்போர், கேட்போருக்கு சுவைபட வழங்கி, அவர்களது சிந்தையில், உணர்வில் ஓரளவாவது அசைவை ஏற்படுத்துவதே கலை என்று கூறலாம்.

சிலருக்கு இயற்கையாகவே சில திறமைகள் அமைந்திருக்கும். சிலர் தாமாகவே திறமைகளை வளர்த்துக் கொள்வார்கள். அதிலும் சிலர் மாத்திரம்தான் தமது கலைகளின் ஊடாக சாதனைகளை செய்து உலகின் கவனத்தை தன்பால் ஈர்க்கின்றனர்.

அந்தவகையில் நியூயோர்க்கை சேர்ந்த 21 வயதுடைய பெண்ணொருவர் தன்னுடைய வித்தியாசமான ஓவிய ஆற்றலால் உலகில் பலருடைய பார்வைகளை தன்மீது விழவைத்துள்ளார்.

ஓவியம் வரைவதில் திறமைமிக்க இப்பெண், தனது எண்ணங்களை வண்ணமாக்க காகிதத்தை தேடவில்லை. மாறாக தனது முகத்தையே வண்ணங்களால் மின்னச்செய்துள்ளார்.

அழகான சிங்கங்கள் முதல் பதற வைக்கும் பேய்கள் என பல வடிவங்களை இவர் தனது முகத்தில் வரைகிறார்.

இவர், தனது முகத்தில் வரையும் ஓவியங்களை இன்ஸ்டகிராமில் பதிவேற்றம் செய்து வருகிறார். இவரது இணையத்தளத்தை 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பின்தொடர்கின்றனர்.

நான் இதனை ஒரு பொழுதுபோக்காகவே செய்து வருகின்றேன். இரவில் எனது படுக்கையறையில் வரைந்து பார்ப்பேன். அப்போதுதான் யாரும் என்னை பார்க்கமாட்டார்கள். அதுமட்டுமன்றி, நான் யாருக்கும் இவ்வாறு செய்து வரைந்து காண்பிப்பதுமில்லை.

ஒருநாள் நான் வெளியிலுள்ள மின்விளக்குகளை அணைப்பதற்காக சென்றேன். அப்போது என்னை பார்த்துவிட்டு பாதையில் சென்றவர்கள பயந்தே போய்விட்டனர். சிலர் ஆச்சரயத்தின் எல்லைக்கே சென்று விட்டனர என அவர் தெரிவித்துள்ளார். (இ)

# குப்பைத் தொட்டிக்குள் அமெரிக்க பேராசிரியர்



குப்பைத் தொட்டியில் வாழ்வதற்கு யாராவது விரும்புவீர்களா? அதுவும் அமெரிக்காவில் வசிக்கும் ஒருவர் குப்பைத்தொட்டியில் தனது நாட்களை கடத்துவது பற்றி கனவிலேனும் யோசித்திருப்பாரா?.

ஆனால் அமெரிக்காவைச் சேர்ந்த பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் குப்பைத் தொட்டியில் வசித்து வரும் தகவல் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது. சம்பவம் பற்றி தெரியவருவதாவது.

அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகத்தில் கடைமையாற்றும் பேராசிரியரான வில்சன் என்பவர், பொதுமக்கள் சாதாரண வாழ்க்கையை விரும்புகின்றார்களா என்பதை ஆய்வு செய்வதற்காக, குப்பைத்தொட்டியில் ஒரு வருட காலம் வாழ்வதற்கு தீர்மானித்துள்ளதுடன், குப்பைத்தொட்டியொன்றை வீடாக மாற்றி, சுமார் 7 மாதங்களாக வாழ்ந்தும் வருகின்றார்.

இவருடைய குப்பைத்தொட்டி வீடானது 36 சதுர அடி அளவினை கொண்டுள்ளது.

குப்பைத்தொட்டி வாழ்க்கையில் மிகவும் கடினமான விடயம் வெப்பத்தை தாங்கிக் கொள்வதேயாகும். எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற இவ்வீட்டில், வெப்ப காலத்தில் 45 பாகை செல்சியஸ் வெப்பமும் குளிர்காலத்தில் 5 பாகை செல்சியஸ் வெப்பமும் காணப்படுகின்றதாம். மேலும் மலசலக் கூடத்திலிருந்து வரும் நாற்றத்தையும் பொறுத்துத்தான் ஆகவேண்டும்.

எனினும் அவருடைய ஆராய்ச்சிக்கான புதிய வழிமுறைகளை கண்டுபிடிப்பதில் ஆர்வமாக இருக்கின்றார்.

ஆரம்பத்தில் இவருடைய இந்த திட்டத்தை பலரும் நிராகரித்தனர். இருந்தபோதிலும் திட்டத்தை கைவிடாமல் முயற்சித்து தற்போது தன்னுடைய ஆய்வின் முடிவு கட்டத்தில் இருக்கின்றார்.

இப்பேராசிரியருக்கு இவ்வாறானதொரு எளிமையான வாழ்க்கை பிடித்திருந்தால் அவர் மேலும் ஒரு வருடம் குப்பைத்தொட்டியிலேயே தனது காலத்தை கழிக்கலாம் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ)

# சீனாவின் ஆதிக்கத்தை எதிர்த்து ஹொங்கொங்கில் ஆர்ப்பாட்டம்

சீனாவின் கட்டுப்பாட்டை எதிர்த்தும் வெளிப்படையான ஜனநாயக முறையில் தேர்தல் நடத்துவதை வலியுறுத்தியும் ஹொங்கொங்கில் கல்லூரி மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்து ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

பிரிட்டனின் காலனி ஆதிக்கத்திலிருந்த ஹொங்கொங் கடந்த 1997 ஆம் ஆண்டு சீனாவின் கட்டுப்பாட்டுக்கு வந்தது.

ஹொங்கொங்கில் ஒரு நாடு, இரு ஆட்சிமுறை அமுலில் உள்ளது. அதாவது, ஹொங்கொங்கின்தலைமை நிர்வாகியை சீன அரசே தேர்ந்தெடுக்கும்.

பாதி சுயாட்சி என்ற அடிப்படையிலேயே ஹொங்கொங் நிர்வாகம் இருந்து வருகிறது.

இதை எதிர்த்து, ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தி ஹொங்கொங் தலைமை நிர்வாகியை தேர்ந்தெடுக்க வேண்டும் என பல ஆண்டுகளாகவே ஹொங்கொங்கில் போராட்டம் நடந்து வருகிறது.

இதைத் தொடர்ந்து எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு தேர்தல் மூலம் ஹொங்கொங் தலைமை நிர்வாகி தேர்ந்தெடுக்கப்படுவார் என சீன அரசு ஒப்புக்கொண்டது.

ஆனால், போட்டியிடும் வேட்பாளர்களை சீன அரசே தேர்ந்தெடுக்கும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, ஹொங்கொங்கில் சீன அரசுக்கு தொடர்ந்து எதிர்ப்பு வலுத்து வருகிறது.

கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்கள் ஹொங்கொங்கில் வெளிப்படையான தேர்தலை வலியுறுத்தி கடந்த திங்கட்கிழமை முதல் வகுப்புகளை புறக்கணித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களுக்கு ஆதரவாக ஆசிரியர்கள், பொதுமக்கள், வர்த்தகர்களும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த நிலையில், ஹொங்கொங்கின் முக்கிய வர்த்தகப் பிரமுகர்கள் சீனத் தலைநகர் பீஜிங்கில் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களைச் சந்தித்து பேசி வருகின்றனர்.

ஆசியாவின் பெரும்பணக்காரரான லி கா ஷிங் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் 60 க்கும் மேற்பட்டோர், ஜனாதிபதி ஜி ஜின்பிங்கைச் சந்தித்து ஜனநாயக மறுசீரமைப்பு குறித்து விவாதித்து வருகின்றனர்.

ஹொங்கொங் என்பது நிதித் தலைமையகம். பிரதான நிதி மாவட்டம் சீர்குலைந்தால் ஹொங்கொங் பாழாகிவிடும் என பெரும் கோடீஸ்வரரும் ரியல் எஸ்டேட் அதிபருமான லீ சாவ் கீ தெரிவித்துள்ளார்.

இப்போராட்டத்தில் மாணவர்கள் இணைந்திருப்பது பெரும் திருப்புமுனையாகக் கருதப்படுகிறது.

இவ்வாரம் முழுக்க அரசு தலைமை அலுவலகத்துக்கு அருகிலுள்ள பூங்காவில் தினமும் திரண்டு சீனாவின் கட்டுப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க மாணவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

பொதுமக்கள் யார் வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிடலாம், சட்டப்பேரவை சீரமைப்பு ஆகியவற்றுக்கு சீன அரசு ஒப்புக்கொள்ள வேண்டும் என ஹொங்கொங் மாணவர்கள் கூட்டமைப்பு வலியுறுத்தி வருகிறது.

380 கல்வியாளர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆதரவாக மனுவில் கையொப்பமிட்டுள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைதூக்கும் அல்கொய்தா பயங்கரவாதம்!

கடந்த 3ஆம் திகதி, இந்தியாவில் ஜிஹாத் தாக்குதல் நடத்துவதற்காக, அல்-காயிதா அமைப்பினர் ஒரு புதிய அமைப்பை உருவாக்க போவதாக அல்-காயிதாவின் தலைவர் அய்மான் அல் ஜவாஹிரி அறிவித்துள்ளார். தனது 55 நிமிட வீடியோ காட்சியில், காய்தாட் அல் ஜிஹாத் என்ற பெயரில் ஒரு புதிய அமைப்பு தொடங்கப்பட்டுள்ளதாகவும், இந்த அமைப்பினர் முதலில் இந்தியாவில் உள்ள பயங்கரவாதக் குழுக்களையும், இஸ்லாமிய இளைஞர்களையும் ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாகவே அல்-காயிதாவினர் இந்தியாவில் தங்களது செயற்பாடுகளை செவ்வனே செய்து வருகிறார்கள் என்பது உளவுத்துறையினருக்கு நன்றாக தெரியும். நேரடியாக களத்தில் இறங்கவில்லை என்பதைத் தவிர, இந்தியாவில் பயங்கரவாத தாக்குதல்களை நடத்திய பயங்கரவாத அமைப்பினருக்கும் அல்-காயிதாவிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதுடன், பயங்கரவாதிகளுக்கு பயிற்சி அளித்தவர்கள் அல்-காயிதாவினர். பயங்கரவாத அமைப்புகளுக்கு அதிக அளவில் நிதி உதவி அளித்த அமைப்பு அல்-காயிதாவும் அதன் தலைவரான ஓசாமா பின்லேடன் என்பதும் உலகறிந்த உண்மையாகும்.



இந்நிலையில் அல்-காயிதா இம்மாதிரியான சி.டி.யை வெளியிட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது. உலக அளவில் ஒரு சக்தி வாய்ந்த பயங்கரவாத இயக்கமாகவும், இஸ்லாமியர்களுக்கு ஆதரவான இயக்கமாகவும் தன்னை வளர்த்துக் கொண்ட அல்-காயிதா, ஓசாம பின்லேடனுக்கு பின் சற்றே மாங்கி வரும் சூழ்நிலை ஏற்பட்டது. இத் தருணத்தில் ஈராக் மற்றும் சிரியாவில் ஒரு புதிய அமைப்பு ஏற்பட்டு, சிரிய அரசாங்கத்திற்கு பெரும் சவாலாக மாறியதும், உலகில் உள்ள பல்வேறு நாடுகளிலிருந்து இந்த அமைப்பிற்கு ஆட்கள் சேருவதும அடிப்படையான காரணமாகும். கடந்த சில மாதங்களாகவே, இஸ்லாமியர்களின் கேடயமாக இருப்பதாக காட்டிக் கொள்ளும் ஐ.எஸ். ஐ.எஸ். என்ற அமைப்பின் செயற்பாடுகளே, அல்-காயிதாவின் சி.டி வெளி வருவதற்கு காரணமாகும். அல்-காயிதா பலமாக இருந்த ஈராக், ஈரான், சிரியா மற்றும் அதை சுற்றியுள்ள இஸ்லாமிய நாடுகளில் ஐ.எஸ்.ஐ.எஸ்.யின் வளர்ச்சியின் காரணமாக, அல்-காயிதா தனது கால்களை தெற்கு ஆசியாவின் மீது பதியத் துவங்கியது.

அல்-காயிதா வெளியிட்டுள்ள சி.டியில் தெற்கு ஆசியாவில் தங்களது கால்களை பதிய குறிப்பாக பர்மா (மியான்மர்), அஸ்ஸாம், பங்களாதேஷ், குஜராத், காஷ்மீர் போன்ற பகுதிகளில் தங்களது அமைப்பை துவங்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஒரு உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது, அதாவது ஓசாமா பின்லேடன் மறைந்த பின்னரும், அல்-காயிதாவினர் தனது பயங்கரவாத தாக்குதல்களை நடத்த இருக்கிறது என்பதாகும். எவ்வாறு லஷ்கர்-இ-தொய்பா இந்தியாவில் பலமாக உள்ளதே, அதேபோல் பங்களாதேஷ் நாட்டிலும் பலமாக உள்ளது. லஷ்கர்-இ-தொய்பா அமைப்புடன் ஹற்கத்-உல்-ஜிகாத்-அல்-இஸ்லாமி அமைப்பும் வலுவாக உள்ளது. இந்த இரண்டு அமைப்புகளும் அல்-காயிதாவுடன் தொடர்பு கொண்ட அமைப்பாகும்.

மேலும் 2011 ஆம் வருடம் மே மாதம் ஒசமா பின்லேடன் கொல்லப்பட்ட பின்னர், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலும் நடந்த பயங்கரவாத தாக்குல்களில் அல்-காயிதாவின் பங்கு உள்ளது என அமெரிக்காவின் பெண்டகான் தெரிவித்தது.

தற்போது வெளியான சி.டியில் உள்ள மற்றொரு முக்கியமான செய்தி, தாக்குதல் நடத்துவதற்கு தற்கொலைப் படையை நிறுவ வேண்டும் என்பதாகும். இதற்காக இந்தியாவில் தடை செய்யப்பட்ட இந்தியன் முஜாஹிதீன் மற்றும் சிமியின் உறுப்பினர்களை இனம்கண்டு, அவர்கள் மூலமாக தற்கொலைப் படையை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு உருவாக்கப்பட்ட தற்கொலை படையின் முதல் பணி காஷ்மீர் மாநிலத்தில் துவங்க வேண்டும். 2015 இல் காஷ்மீர் சட்டமன்ற தேர்தல் நடப்பதற்கு முன்பாகவே இந்தப் பணி நிறைவடைய வேண்டும் என்பதுதான் அல்-காயிதா போட்டுள்ள திட்டம் என உளவுத் துறையினர் தெரிவித்தார்கள்.

மேலும் அந்த சி.டியில் உள்ள வேறு ஒரு செய்தி, பர்மா, காஷ்மீர், பங்களா தேஷ், இஸ்லாமபாத் ஆகிய பகுதிகளில் உள்ளவர்கள் நமது சகோதரர்கள், இவர்களை அல்-காயிதா மறக்கவில்லை, இவர்களும் அல்-காயிதாவை மறக்கவில்லை. இதைப்போலவே இந்தியாவில் உள்ள இஸ்லாமியர்களும் நமது சகோதரர்கள் என்பதை மறக்க கூடாது" (ஆதாரம் 8.9.2014 ஆம் திகதி ஏசியன் ஏஜ் என்ற பத்திரிக்கையில் வெளி வந்த தகவல்)

இந்தியாவில் தங்களது அமைப்பான காய்தாட் அல் ஜிகாத் அமைப்பை ஏற்படுத்த 2013 இற்கு முன்பாக இருந்தே திட்டமிட்ட ரீதியில் காய்களை நகர்த்தியுள்ளது. 2013 ஜூன் மாதம் பேசிய பேச்சின் சி.டி. ஜூலை மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதில் சிரியாவில் நடக்கும் புனித போருக்கு, இந்திய இஸ்லாமியர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என அல்-காயிதாவின் இரண்டாம் கட்ட தலைவரான மௌலான அசீம் உமர் என்பவர் கூறியதாக செய்தி வெளியாகியது. இந்த சி.டியின் தலைப்பு" உங்கள் பகுதியில் ஏன் இன்னும் சூறாவளி ஏற்படவில்லை" என்பதாகும். இந்த அறிவிப்பின் காரணமாக மூன்று இஸ்லாமியர்கள் சிரியாவில் நடக்கும் புனித போருக்கு தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள். பெங்களூரில் பிறந்து சவுதியில் வாழும் கபீல் அகமது, வதோராவில் பிறந்து லண்டனில் வாழும் அபுமூசா அல் ஹிந்த், சிமி இயக்கத்தை சார்ந்த மெக்கானிக்கல் என்ஜினியர் முகமது நியாஸ் அப்துல் ரஷீத் எனபவன். இவர்களை போல் இன்னும் பலர் அல்-காயிதா கொடுத்த அழைப்புக்கு ஏற்ப சிரியாவில் நடக்கும் புனித போரில் கலந்துகொண்டாக கூறினாலும் முறையான தகவல்கள் கிடையாது.

இந்தியாவில் அல்-காயிதாவின் அமைப்பு துவங்கப்படவில்லை என்பது உண்மையாகும். ஆனால், அல்-காயிதாவினால் பயிற்சி பெற்றவர்கள் அதிக அளவில் உள்ளார்கள். இந்தியாவில் உள்ள இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான, லஷ்கர்-இ-தொய்பா, இந்தியன் முஜாஹிதீன், சிமி, ஜெய்-இ-முகமது போன்ற அமைப்புகளும், காஷ்மீர் மாநிலத்தில் இயங்குகின்ற பிரிவினைவாத அமைப்புகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இதற்கு முக்கியமான காரணம், அல்-காயிதாவின் அடிப்படை கொள்கையாகும். அல்-காயிதா என்பது ஒரு பிரந்திய ராணுவமல்ல- இது ஒரு சர்வதேச ராணுவமாக இருக்க வேண்டும், என்ற அடிப்படைக் கொள்கையும், ஒவ்வொரு தேசத்திலும் நமக்கொரு தளம் இருக்க வேண்டும். அர்பணிப்பு உணர்வுள்ள இளைஞர்களைத் தேடிக் கண்டுபிடித்து முதலில் சித்தாந்தப் பயிற்சி அளிக்க வேண்டும். அதன் பின்னர் அவர்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அல்-காயிதாவினர் இயங்கினார்கள். இதன் காரணமாகவே உலகில் உள்ள பலவேறு நாடுகளில் செயற்பட்டுக் கொண்டிருந்த இஸ்லாமிய பயங்கரவாத இயக்கங்களுக்கு நிதி உதவி என்றும், ஆயுத பயிற்சி என்றும், வழங்கி தங்களது நெருக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

## இந்தியாவில் அல்-காயிதாவின் செயற்பாடுகள்

2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் காஷ்மீரிலிருந்து வெளிவரும் கரண்ட் நியுஸ் சர்வீஸ என்ற செய்தி பத்திரிக்கையில் அல்-காயிதாவின் இந்திய தலைமை பொறுப்பு வகிக்கும் அபு அப்துல் ரஹூமான் அல் அன்ஸாரி என்பவன் கொடுத்த அறிக்கையை, அவனுக்கு பதிலாக, அபு அபிரஹிம் அல் அஸிம் என்பவனின் உரை அடங்கிய ஒரு சி.டி. வெளியிடப்பட்டுள் ளது. இந்த உரையை ஸ்ரீநகரில் உள்ள கௌவ் காடல் என்ற மசூதியில் வெளியிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சி.டியில் உள்ள வாசகம், "அமெரிக்கா இந்தியாவில் அதிநவீன ஆயுதங்களை வழங்கி இஸ்லாமியர்களை அடக்க திட்டமிட்டுள்ளது. இந்த உறவு இஸ்லாமியர்களுக்கு எதிரானது. இதற்காக அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் மேற்கத்திய நாடுகளுடன் இந்தியா ஒரு புதிய உறவு துவங்க இருக்கிறது. இந்த உறவின் காரணமாக காஷ்மீர் பகுதி பிரிக்கப்பட்டு, ஒரு பகுதியில் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, இஸ்லாமியர்களை அடக்கவும், அல்லது அவர்களை கொன்றுவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதை எதிர்க்க அனைத்து இஸ்லாமியர்களும் ஒன்றுப்பட வேண்டும். இதற்காக இந்தியாவின் மீது புனித போர் தொடுக்கப்பட்டுள்ளது. காஷ்மீர்தான் புனித போருக்கு நுழைவாயில். "என அந்த அறிக்கையில் குறிப்பாக வெளியிடப்பட்டுள்ள சி.டியில் குரல் பதியப்பட்டுள்ளது.

அல்-காயிதாவின் தலைமையிடத்திலிருந்து இந்தயாவில் இஸ்லாத்தின் துரோகிகள் என்ற பெயரில் 2008 லே மீண்டும் வெளியிடப்பட்ட சி.டியில், ஹூரியத் கான்பிரன்ஸ் தலைவர்களான சயீத் அலி ஷா ஜிலானி, மீர்வாஸ் மௌலி உமர் ஃபரூக், அப்துல் கானி பட் மற்றும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி தலைவர் யாசின் மாலிக் உட்பட்டவர்கள் இஸ்லாத்தின் துரோகிகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியல் தலைவர்கள் என்று ஜம்மு காஷ்மீர் முதலவராக இருந்த குலாம் நபி ஆஸாத், பி.டி.பியின் தலைவர் முப்தி முகமது சயீத், தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் பரூக் அப்துல்லா. இவர்களைப் போலவே பயங்கரவாத இயக்கத்தின் தலைவர்களான ஹிஜ்புல் முஜாஹிதின் அமைப்பின் சயீத் சலாஹூதின் எனவும், இவன் ஹூரியத் கான்பிரன்ஸ் அமைப்பினரை காப்பாற்றும் காரியத்தில் ஈடுபடுவதால் இவனும் இஸ்லாத்தின் துரோகி என பட்டியலிட்டு இவர்களுக்கு எதிராகவும் புனித போர் துவங்கப்படும் என விவரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உள்ள பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆயுதங்கள், வெடிப் பொருட்கள் மற்றும் பயிற்சி அளிப்பது, பாகிஸ்தானில் உள்ள ஐ.எஸ்.ஐ. என்பதும், பெருவாரியான பயங்கரவாத அமைப்பினருக்கு, பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் பகுதியில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நேரடியாக கொடுக்கின்ற பயிற்சி என்பது ஐ.எஸ்.ஐ.யை தவிர வேறு சில அமைப்புகள் மூலமாக கொடுக்கப்படுகிறது. பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. மூலமாக நேரடியாக சில இடங்களில் பயங்கரவாதிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மறைமுகமாக கொடுக்கின்ற பயிற்சி, இந்தியாவின் எல்லைப் பகுதிகளில் அளிக்கப்படுகிறது. அவ்வாறு பயிற்சி அளிக்கப்படும் இடங்கள், போக், வடக்கு பகுதியான ஜில்ஜிட், பலுஸ்தான், நார்த் வெஸ்ட் ஃப்ராண்டியர் புராவின்ஸ் போன்ற பகுதிகளாகும். இவ்வாறு பயிற்சி அளிப்பதற்காகவே இஸ்லாமிய ஜிகாத் அமைப்புகள் பாகிஸ்தானில் செயறபடுகின்றன. இந்த அமைப்புகளில் உள்ளவர்கள் அல்-காயிதாவினால் நன்கு பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1993 லிருந்து பாகிஸ்தானால் உருவாக்கப்பட்ட பயங்கரவாத அமைப்புகள் இந்தியாவில் செயற்படுகின்றன. இந்த அமைப்புகள் அனைத்தும் அல்-காயிதாவிற்கு ஆதரவாகவே தங்களது தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். 1993 இல் பாகிஸ்தான், அல்-காயிதாவிற்கு ஆதரவாகவும், அவர்களின் சிந்தனைக்கு ஏற்ப செயற்படுத்த ஹற்கத்-உல்-முஜாஹூதின், ஹற்கத்-உல்-ஜிகாத்-அல்-இஸ்லாமி, லஷ்கர்-இ-தொய்பா போன்ற பயங்கரவாத அமைப்புகளை உருவாக்கி, அந்த அமைப்பினர் காஷ்மீர் பகுதியில் ஊடுருவ அனைத்து ஏற்பாடுகளையும் செய்தது. இதன் காரணமாக இந்த அமைப்புகளைச் சார்ந்தவர்கள் இந்தியாவின் காஷ்மீர் உட்பட மற்ற பகுதிகளுக்கும் தங்களது செயற்பாடுகளை நடத்த இடம் பெயர்ந்தார்கள். 2001 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்பு பாகிஸ்தானில் பயங்கரவாதிகளுக்கு பயிற்சி கொடுத்தவர்கள் ஆப்கான் எல்லையில் உள்ள சர்வதேச இஸ்லாமிய முன்னணி என்ற அமைப்பாகும். அல்-காயிதாவினால் உருவாக்கப்பட்ட சர்வ தேச இஸ்லாமிய முன்னணி உலகில் பல்வேறு நாடுகளில் இயங்கும் பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்ப்பு கொண்டவர்கள், அவர்களுக்கு பயிற்சி அளிப்பவர்கள். இந்தியாவில் உள்ள பயங்கரவாத அமைப்புகள் அனைத்தும் பாகிஸ்தானால் உருவாக்கப்பட்டவை, குறிப்பாக ஐ.எஸ்.ஐ மட்டுமே இந்த காரியங்களில் ஈடுபடுகிறது. இவ்வாறு உருவாக்கப்பட்ட அமைப்புகளான லஷ்கர்- தொய்பா, ஹற்கத்-உல்-முஜாஹூதின், ஹற்கத்-உல்-ஜிகாத்-அல்-இஸ்லாமி, ஜெய்-இ- முகமது, லஷ்கர்-இ-ஜான்வி ஆகிய ஐந்து அமைப்புகளும் அல்-காயிதாவின் சர்வதேச இஸ்லாமிய முன்னணியின் ஓர் அங்கமாகும்.மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து அமைப்புகளில், ஷியா இஸ்லாமியர்களுக்கு எதிராக இருக்கும் அமைப்பான லஷ்கர்-இ-ஜான்வி என்பது மட்டும் பாகிஸ்தானில் இயங்குகிறது, மற்ற நான்கு அமைப்புகளும் இந்தியாவில் பயங்கரவாத தாக்குதல்களை நடத்திய அமைப்பாகும்.

பாகிஸ்தான் அரசு அமெரிக்காவின் நிர்பந்தத்திற்கு உட்பட்டு இந்த ஐந்து அமைப்புகளுக்கு தடைவிதித்தது. இந்த தடையானது, பாகிஸ்தானால் கைப்பற்றப்பட்ட காஷ்மீர் பகுதி, பாகிஸ்தானின் வடக்கு பகுதி, மலை வாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் தடை கிடையாது. விதிக்கப்பட்ட தடைகளில் ஹிஜ்புல் முஜாஹூதின் மற்றும் ஹற்கத்-உல்-ஜிகாத்-அல்-இஸ்லாமி என்ற இரண்டு பயங்கரவாத அமைப்புகளுக்கும் தடையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. ஏனெனில். இந்த இரு அமைப்புகளும் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐயால் உருவாக்கப்பட்டது, அல்-காயிதாவிற்கு மிகவும் நெருக்கமான அமைப்பாகும்.

பாகிஸ்தானால் உருவாக்கப்பட்ட ஹற்கத்-உல்-ஜிகாத்-அல்-இஸ்லாமி, ஹிஜ்புல் முஜாஹூதின் என்ற இரண்டு அமைப்புகளும் இந்தியாவில் நடத்திய பயங்கரவாத தாக்குதல்களின் பின்னணியில் அல்-காயிதா எவ்வாறு செயற்பட்டது என்பதை பார்க்க வேண்டும். மேலும் இந்த இரண்டு அமைப்புகளும் எந்த எந்த அமைப்புகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டன என்பதும், இதன் மூலம் வேறு சில அமைப்புகளும் துவங்கப்பட்டன, இவ்வாறு வேறு பெயர்களில் துவங்கப்பட்ட அமைப்பிற்கும் அல்-காயிதாவிற்கும் எவ்வாறு தொடர்ப்பு ஏற்பட்டது என்பதையும் காண வேண்டும்.

(தொடரும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்கள் இலங்கை விவகாரங்கள் குறித்து பேச்சு!

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைச்சர்கள் இலங்கை விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்கும் பொதுநலவாய நாடுகள் உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் இவ்வாறு பேசவுள்ளனர்.

பிரதான நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் இலங்கை விவகாரம் குறித்தும் கலந்துரையாடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுநலவாய நாடுகள் கொள்கைகள், கோட்பாடுகள் பாரியளவில் மீறப்படுகின்றமை குறித்து அமைச்சர்கள் கவனம் செலுத்த உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.


பொதுநலவாய நாடுகள் அரசியல் பெறுமானங்களை பேணிப் பாதுகாப்பது தொடர்பில் வலியுறுத்தப்படவுள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உறுப்புரிமை இரத்து செய்யப்பட்ட பிஜீ தீவுகள் தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பொதுநலவாய நாடுகள் வெளிவிவகார அமைச்சர்களின் 13 ஆம் மாநாடும் நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஆழிப்பேரலையினால் 1.5 பில்லியன் நாசமானது

## அமைச்சர் அமரவீர தகவல்




ஆழப்பேரலை அனர்த்தத்தின் போது 1.5 பில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாக 35 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதுடன் பல்லாயிரக்கணக்கான வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்தன. கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட அழிவுகளிலிருந்து நாடு மீண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். எதிர்கால அனர்த்தங்களை எவ்வாறு எதிர்நோக்குவது என்பது குறித்து கருத்தரங்கில் ஆராய்ந்து பரிந்துரை செய்யவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# சுப்பிரமணியசுவாமிக்கெதிராக மற்றுமொரு அவதூறு வழக்கு



(கொழும்பு)

பாரதீய ஜனதாக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் சுப்பிரமணியன் சுவாமிக்கு எதிராக தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் நேற்று முன்தினம் மேலும் இரண்டு அவதூறு வழக்குகளை தாக்கல் செய்துள்ளார்.

சுப்பிரமணியன் சுவாமி அண்மையில் தனது டுவிட்டர் தளத்தில் வெளியிட்டிருந்த கருத்துக்களுக்கு எதிராக இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி சுப்பிரமணியன் சுவாமியின் டுவிட்டர் தளத்தில் பதிவு செய்யப்பட்ட கருத்துக்களால் தமிழக முதல்வரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக இந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ள சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் மதிப்பையும் பெற்றுள்ள முதல்வர் ஜெயலலிதா தொடர்பாக சுப்பிரமணியன் சுவாமி அடிப்படையற்ற கருத்துக்களை வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி டுவிட்டர் தளத்தில் வெளியிடப்பட்ட கருத்தொன்றை அடிப்படையாக கொண்டு, ஏற்கனவே தமிழக முதல்வர் சார்பில் சுப்பிரமணியன் சுவாமிக்கு எதிராக அவதூறு வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களின் படகுகள் இலங்கையில் தடுத்து வைக்கப்படுகின்றமை தொடர்பாக வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பான வழக்கொன்றில் அடுத்த மாதம் 30 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ஏற்கனவே தமிழக நீதிமன்றம் சுப்பிரமணியன் சுவாமிக்கு அழைப்பாணை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# தமிழக மீனவர்களின் படகுகளை ஏலம் விடும் நோக்கமில்லையாம்

## மீன்பிடி அமைச்சு அறிவிப்பு

இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட மாட்டாது என்று இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தமது பிடிபட்ட படகுகள் இலங்கை அதிகாரிகளால் ஏலத்தில் விடப்படவுள்ளதாக அண்மையில் தமிழக மீனவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் ராமதாஸின் இது தொடர்பான குற்றச்சாட்டும் இந்திய ஊடகங்களில் வெளியானது.

எனினும் அவ்வாறான எந்த ஏற்பாடுகளும் இல்லை என்று மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளர் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த படகுகளை ஏலத்தில் விடவேண்டுமெனின், அதற்கு நீதிமன்றத்தின் அனுமதி தேவை என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் தற்போது 76 மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 73 படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இன்று ஒரு தகவல்

## குதிரை

“குதிரைக்கும் கழுதைக்கும் என்ன வித்தியாசம்?” என்று கேட்டார் ஒருத்தர்.

“குதித்து ஓடத்தெரிந்தால் அது குதிரை. கனைத்துக் கொண்டே சுமக்கத் தெரிந்தால் அது கழுதை என்று அதற்கு வேடிக்கையான விளக்கம் கொடுத்தார் இன்னொருத்தர்.

இந்த உலகத்தில் சுமப்பதற்கென்றே பிறந்தது கழுதை. ஓடுவதற்கென்றே பிறந்தது குதிரை. அடுத்தவர்களின் முதுகில் சவாரி பண்ணுவதற்கென்றே பிறந்தவன் மனிதன்.

அதனால்தான் குதிரையின் முதுகில் ஏறி உட்கார்ந்து கொள்கிறான். அது மட்டுமல்ல. அது அங்குமிங்கும் பார்க்காமல் வேகமாக ஓட வேண்டுமென்பதற்காக அதற்கு கண்ணடக்கம் மாட்டிவிடுகிறான். குதிரையின் கண் இருக்கிறதல்லவா அது கொஞ்சம் வித்தியாசமானது.

குதிரையின் தலையில் கண் பக்கவாட்டில் இருக்கும். இதனால் அதற்கு இரண்டு ஒற்றைக் கண் பார்வை கிடைக்கிறதாம். அது ஒரே சமயத்தில் தன்னுடைய இரண்டு பக்கவாட்டுத் திசைகளிலும் பார்க்க முடியுமாம். அது மட்டுமல்ல தனக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்பதையும் அதனால் பார்க்க முடியுமாம். நம்மால் அதனைப் போன்று பார்க்க முடிந்தால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும். அதன் உடம்பால் மறைக்கப்படும் பின்பகுதியை மட்டும்தான் குதிரையால் பார்க்க முடிவதில்லை. தனக்கு முன்னாள் உள்ள ஒரு பொருளை இரண்டு கண்களாலும் பார்க்கும் போது கண்களை முன்பக்கம் திரும்பி பார்வையைக் குவியப்படுத்தும். அப்பொழுது அதற்கு பக்கவாட்டுப் பார்வையும் பின்புறப்பார்வையும் மறைந்து விடும்.

அப்படி அது இரண்டு கண்களின் பார்வையையும் குவித்துப் பார்க்கும் போது அதனுடைய கண்கள் சுமார் 1.2 மீற்றருக்கு குறைவான தொலைவிலிருக்கும் பொருட்களை குவியப்படுத்த முடியாதாம். அதனால் அது தான் உண்ணும் இரையைக்கூட பார்ப்பதே இல்லையாம். வேடிக்கையாகத்தான் இருக்கிறது.

நாம்கூட பல சமயங்களில் அவசரமாக சாப்பிடும் போது சாப்பிடுவது என்ன என்பதைக் கவனித்தா சாப்பிடுகிறோம்? சாப்பிடுவதுஎன்னவென்பது கைக்கும் வாய்க்கும்தான் வெளிச்சம். குதிரைக்கும் நமக்கும் இப்படி ஒரு ஒற்றுமை.

குதிரையை வண்டியில் கட்டும்போது, சவாரி செய்யும் போதெல்லாம் அதன் கண்ணுக்கு -கண்ணடக்கம் என்று சொல்லி திரைபோட்டு மறைத்து விடுவது... எதற்கென்றால்...அப்பொழுதுதான் அது போகும் திசையில் மட்டும் கவனத்தை வைத்துக்கொண்டு ஓடும். பக்கத்திலும் பின்னாலேயும் என்ன நடக்கிறதென்பதே அதற்குத் தெரியாது. குதிரைப் பந்தயத்தில் தடை தாண்டும் போட்டிகளை பார்த்திருக்கிறீர்களா? நடுவில் வைத்திருக்கும் தடைகளை தாண்டி ஓடும். அந்த சமயத்திலெல்லாம் அது தரையையோ தடையையோ பார்க்க முடியாதாம். ஏதோ ஒரு குருட்டாம் போக்கில்தான் தாண்டுமாம்.

ஆனால் ஒரு விடயம். எந்த நேரத்தில் கால்களைத் தூக்கி எழும்ப வேண்டுமென்பதை குதிரை மீது உட்கார்ந்திருப்பவர் சைகைகள் மூலமாக தெரிவித்து விடுகிறார். அதைப் புரிந்து கொண்டு அது தாண்டி விடுகிறது. அவ்வளவுதான். அவர் தவறுதலாக ஏதாவது காட்டி விட்டால் குப்புற விழ வேண்டியதுதான். குதிரையின் கண்களைவிட உயர்ந்த மட்டத்திலிருக்கும் பொருளையும் அதனால் தெளிவாகப் பார்க்க முடியாது. மிகத் தூரத்தில் உள்ள பொருளையும் விபரமாக பார்க்க முடியாது. அது மட்டுமல்ல நிறங்களையெல்லாம் அதனால் கண்டு பிடிக்க முடியாது. (நிறக்குருடு)

சரி, இப்படியெல்லாம் இருந்தும் குதிரை எப்படி சமாளிக்கிறது? இதற்கு கைகொடுப்பது அதனுடைய கழுத்து. அதற்கு நீளமான கழுத்து. அதன் உதவியால் தலையை அவ்வப்போது தகுந்த நிலைமைக்கு மாற்றி திருப்பி தன்னுடைய கண்ணில் பொருள் தெளிவாக தெரியும்படி செய்து கொள்கிறது.

தலையை தூக்கி விட்டால் தூரத்தில் உள்ளதை பார்க்கும். தாழ்த்தி விட்டால் அண்மையில் உள்ளதை பார்க்கும்.

கண்ணில் விழித்திரை ஒன்று இருக்கும் அல்லவா? அது மற்ற விலங்குகளுக்கு குழிவாக இருக்கும். குதிரைக்கு தட்டையாக இருக்கும். அதனால்தான் தலையைத் திருப்பி விம்பம் விழுவது மாதிரி செய்து கொள்ள முடிகிறதாம்.

ஒரு நல்ல தரமான குதிரை எப்படி இருக்க வேண்டும்? நெற்றி குறுகலாக இருக்க வேண்டும். இரண்டு பக்கமும் கண் சமமாக சரியாக இருக்க வேண்டும். இப்படி இருந்தால் அந்தக் குதிரை தன் தலைக்கு முன்னால் இருப்பதை தெளிவாக பார்க்க முடியும். அது தான் உயர்தரமான குதிரை.

குதிரைக்கு பழக்கமும் பயிற்சியும் மிக முக்கியம். ஒருத்தர் ஒரு குதிரைக்கு பயிற்சி கொடுத்து கொண்டிருந்தார். அந்தக் குதிரை முன்னால் நின்று கொண்டிருக்கும் இவர் பின்னால் கொஞ்ச தூரத்தில் இருந்து வேகமாக ஓடி வந்து ஒரு ‘ஜம்ப்’ பண்ணுவார். அப்படியே உயர ஆகாயத்தில் எழும்பி குதிரையின் முதுகில் போய் பொத்தென்னு உட்காருவார். அதே விநாடி அந்தக் குதிரை பாய்ந்து ஓட ஆரம்பித்து விடும். அப்படி ஒரு பயிற்சி. இதைப்பார்த்த ஒரு பெரியவர் “இப்படி பொத்தென்று போய் விழுந்தால் குதில்ரயின் இடுப்பு என்னத்திற்கு ஆகும் உடைந்து விடாதா” என்றார். இவர் அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

கொஞ்ச நாள் கழித்து, பயிற்சி கொடுத்தவர் அந்த பெரியவரை மறுபடியும் பார்த்தார்.

“ஐயா” நீங்கள் சொன்னது மாதிரியே இடுப்பு உடைந்துபோய் விட்டது” என்றார்.

“குதிரைக்கா?” என்று கேட்டார் அவர்.

“இல்லை... எனக்கு!” ஏன்றார் இவர்.

பார்த்தால் இடுப்பு வளைந்து போயிருந்தது.

“எப்படி?” என்று கேட்டார் அவர்.

“குதிரைக்கு பயிற்சி எல்லாம் நல்லாத்தான் கொடுத்தேன். அது முடிந்த பின்னர் ஒரு தடவை நான் வழக்கம் போல பின்னாலிருந்து ஓடி வந்து ஸ்டைலாக ‘ஜம்ப்’ பண்ணி ஆகாயத்தில் எழும்பி குதிரையின் முதுகில் உட்கார போனேன். நான் உட்காருவதற்கு முன் குதிரை ஓட ஆரம்பித்து விட்டது. தரையில் உட்கார்ந்து விட்டேன் அதுதான் இப்படி ஆகிவிட்டது” என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளுக்கு காளான் செய்கையை மேற்கொள்ள உபகரணத் தொகுதிகள்



வடமாகாண விவசாய அமைச்சுக்கென குறித்தொதுக கப்பட்ட அபிவிருத்தி நிதியத்தில் இருந்து 1.5 மில்லியன் ரூபா செலவில் மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் மன்னார் உயிலங்குளத்தில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் மன்னார் உதவி விவசாயப் பணிப்பாளர் கே.அற்புதச் சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு உள்ளீடுகளை வழுங்கிவைத்துள்ளாா.

இதன்போது தரமான விதை நெல் உற்பத்தியை மேற்கொள்வதற்கும் உணவுத் தானிய உற்பத்திக்கெனவும் பி. ஜி 360 ரக விதை நெல்லும், பல்லாண்டுப்பயிர்களின் கீழ் பழச்செய்கையை மேற்கொள்வதற்கென அன்னாசி உறிஞ்சிகளும், அடர் முறையில் மாமரச் செய்கையை மேற்கொள்வதற்கென நல்லின கறுத்தக் கொழும்பான் மாமரக் கன்றுகளும, விவசாய வனவியலை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு தென்னை, மா, மாதுளை போன்றவையும் பசுந்தாட் பசளைப் பாவனையை ஊக்குவிக்கும் நோக்கில் சணல் விதைகளும், காளான் செய்கைக்குப் பயன்படுத்தப்படும் உபகரணத்தொகுதிகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட செயற்றிட்டத்தின் கீழ் உப செயற்றிட்டங்களான நெற்செய்கையில் கண்ட முன்மாதிரித் துண்ட செயற்றிட்டத்திற்கு 10 பயனாளிகளுக்கு பதிவு செய்யப்பட்ட விதை நெல்லான பி ஜி 360 3 புசல் வீதமும் இவற்றுடன் நொமினி களைநாசினி 100 மில்லி லீற்றரும் நாகசல்பேற்று 2 கிலோ கிராமும் வழங்கப்பட்டன. மண் வளத்தை பேணும் முகமாக நெல் உமியை கரியாக்கும் உபகரணமும் தலா ஒவ்வொன்றும் குறிப்பிட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

மேலும் தரமான விதை நெல் உற்பத்தித்திட்டத்தின் கீழ் மேலே குறிக்கப்பட்ட உள்ளீடுகளுடன் வேட்டகோ பூச்சிநாசினியும் 75 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. அத்துடன் மாவட்டத்தில் பசுந்தாட்பசளை பாவனையை ஊக்குவிக்கும் முகமாக மாவட்டத்தில் 100 பயனாளிகளுக்கு 6 கிலோகிராம் வீதம் சணல் விதை வழங்கப்பட்டுள்ளது.

இதே திட்டத்தின் கீழ் அப்பயனாளிகளுக்கு 100 கிளிசிறிடியா தடிகளும் வழங்கப்படவுள்ளன. இத்துடன் பல்லாண்டு பயிர்களின் கீழ் ஊடுபயிராக அன்னாசி செய்கையை ஊக்குவிக்குமுகமாக 5 பயனாளிகளுக்கு தலா 400 அன்னாசி உறிஞ்சிகள் வீதம் வைபவத் தில் வழங்கப்பட்டது. மேலும் 15 பயனாளிகளுக்கு எதிர் வரும் வாரத்தில் அன்னாசி உறிஞ்சிகள் வழங்கப்படவுள்ளது.

செறிவான முறையில் மாமரச் செய்கையை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் 16 பயனாளிகளுக்கு தலா 50 கறுத்த கொழும்பான் இன ஒட்டு மாங்கன்றுகள் வழங்கப்பட்டன. சந்தைவாய்ப்பிற்கு ஏற்ப சின்ன வெங்காயத்தை சேமித்து விற்பனை செய்து அதிக வருமானத்தை பெறுவதை ஊக்குவிக்கும் பொருட்டு 5 விவசாயிகளுக்கு வெங்காய கொட்டில்கள் அமைப்பதற்கான 50 சதவீத மானிய தொகையான 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வைபவத்தில் வைத்து வழங்கப்பட்டன . மொத்தமாக 1.5 மில்லியன் ரூபா பெறுமதியான உள்ளீடுகள், காசோலைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், மாகாணசபை உறுபபினா் பிறூஸ் சிராய்வா, விவசாய அமைச்சின் செயலாளர் யு.எல்.எம். ஹால்தீன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் ஆகியோருடன் மன்னார் பிரதேச சபை, நகரசபை உறுப்பினர்களும், பெருந் தொகையான விவசாயிகளும் கலந்து கொண்டிருந்தார்கள். (2)




## முதியோர் தேசியமட்ட அறிவுப்போட்டியில் கரைச்சி பிரதேச செயலகம் ஆறாமிடம்




(கிளிநொச்சி)

சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகம் நடத்திய முதியோருக்கான அறிவுப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலக அணி 6 ஆம் இடத்தைப் பெற்றது. சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு சிரேஷ்ட பிரஜைகளுக்கான பொது அறிவுப் போட்டி நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள பத்திரமுல்லையில் அமைந்துள்ள முதியோர் செயலகத்தில் நடைபெற்றது.

இதில் முதியோர்களின் திறமையினை வெளிக்கொண்டு வருவதனை நோக்காகக் கொண்டு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட பொது அறிவுப்போட்டியில் பிரதேச மட்டத்தில் தெரிவாகிய போட்டியாளர்கள் மாவட்ட மட்டத்தில் போட்டியிட்டு அதிலும் வெற்றி பெற்றவர்களுக்கான தேசிய மட்டப்போட்டி நடைபெற்றது.

இதில் 24 மாவட்டத்திலும் இருந்து போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

இப்போட்டியில் முதலாவது சுற்றில் நான்கு விடைகளைக் கொண்ட பல்வேறு வினாக்களும் இரண்டாவது சுற்றில் நேரடியாக விடை களை அளிக்கக்கூடிய வினாக்களும் அமைந்திருந்ததுடன் மூன்றாவது சுற்றில் உருவங் களை இனம்காணும் வினாக்களையும் கொண்டதாகவிருந்தது.

இதில் வடமாணத்தில் இருந்து பங்கேற்ற கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த போட்டியாளர்கள்தமதுதிறமைகளைநன்கு வெளிப்படுத்திஆறாவது இடத்தை தக்கவைத்துக்கொண் டனர்.

இப்போட்டியாளர்களுக்கான முன்னேற்ற ஏற்பாடுகளை மாவட்ட சமூகசேவை அலுவலர் வே.தபேந்திரன், கரைச்சி பிரதேச செயலக முதியோர் மேம்பாட்டு அபிவிருத்தி அலுவலர் செல்வி.கே.காந்திமதி ஆகியோர் நெறிப்படுத்தினர். (2-254)

## வவுனியாவில் வீசிய மினிசூறாவளியினால் தொலைத்தொடர்பு கோபுரம் முறிந்து சேதம்



(குருமன்காடு)

வவுனியாவில்நேற்று முன்தினம் மாலை இடிமுழக்கம் மற்றும் மழையுடன் கூடிய பலத்த காற்று வீசியதையடுத்து மினி சூறாவளி ஏற்பட்டுள்ளது.

இந்த மினிசூறாவளியில் சிக்கி மூவர் காயமடைந்துள்ளதாக வவுனியா வைத்திய சாலை விபத்துக்கள் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியா கண்டி வீதியிலுள்ள நீதிமன்றத்தின் முன் அமைந்திருந்த மரமொன்றின் கிளை வீழ்ந்தமையினாலேயே தாயும் இரு மகள்மாரும் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்நிலையில் வவுனியா தாண்டிக்குளத்தில் அமைந்திருந்த தொலைத்தொடர்பு கோபுரமொன்று கடும் காற்றினால் முறிந்து வீழ்ந்துள்ளது.

எனினும் வெறும் காணியில் இக் கோபுரம் வீழ்ந்துள்ளமையினால் எவருக்கும் சேதங்கள் ஏற்படவில்லை.

அதேபகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தின் மடப்பள்ளிக்கு போடப்படிருந்த சில கூரை கழன்றுள்ளதுடன் கொட்டகைகளின் கூரைகளும் கழன்றுள்ளன.

இதேவேளை வவுனியா உக்குளாங்குளம் வீதிகளில் பாரிய மரங்கள் சரிந்து வீழ்ந்துள்ளன. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன்மின்சாரகம்பிகள், தொலைதொடர்பு வயர்கள் அறுந்தமையினால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. (2-250)

## மூன்றுமுறிப்பு பிள்ளையார் கோவில் கிணற்று நீர் பால் நிறமாக மாறுகிறது

### அதிசய அறிகுறி தென்படுவதாக பக்தர்கள் தெரிவிப்பு

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேசத்தின் மூன்று முறிப்பில் அமைந்துள்ள பிள்ளையார் கோவில் கிணற்று நீர் நேற்று முன்தினத்தில் இருந்து வெள்ளை நிறமாக ஊற்றெடுக்க ஆரம்பித்துள்ளதாக ஆலய வளாகத்தினரால் தெரிவிக்கப்படுகிறது.

இவ் அதிசயத்தை பார்ப்பதற்காக வருகை தரும் மக்கள் கூட்டம் அந்நீரை கைகளில் எடுத்து கண்களில் ஒற்றி செல்கின்றனர்.

அத்துடன் இக்கிணற்றின் அருகே நேற்றையதினம் **பால் பொங்கும் அதிசயம்** என பக்த அடியார்களால் பெயர்ப்பலகையொன்று போடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மூன்று முறிப்பு பிள்ளையார் கோவில் கிணறு வெட்டப்பட்டு இரு வருடங்கள் கடந்தும் கட்டுமானப் பணிகள் இடம் பெறாது காணப்பட்டது.

இக்கிணறு பெக்கோ வாகனத்தின் உதவியுடன் தோண்டப்பட்டதால் மிகவும் பெரிதாக அகன்று காணப்பட்டது. இந் நிலையில் கடந்த வாரம் இக் கிணற்றினுள் காணப்பட்ட சேறு அகற்றப்பட்டு துப்புரவு பணி மற்றும் கட்டுமானப் பணி நடைபெற்று நீரை சுத்தமாக பெறுவதற்காக நேற்று முன்தினம் இறைக்கப்பட்டது.

இதனையடுத்து இக்கிணற்றின் அடியிலிருந்து வெள்ளைநிறமான நீர் ஊற்றெடுக்க ஆரம்பித்தது.

இதனைத்தொடர்ந்து மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இதனை பார்வையிட்டு கிணற்று நீரை 10 தடவைக்கு மேல் இறைத்தும் அதிலிருந்து வெள்ளை நிறமான நீரே ஊற்றெடுத்துக் கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

எனினும் கிணற்றினுள் காணப்படும் நீரானது வெள்ளை நிறமாகவும் கிணற்றின் கட்டுமானத்திற்கு அருகில்காணப்படும்நீர் வழமை போன்றும் உள்ளதாக அடியார்களால் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிணற்று நீரில் அதிசய அறிகுறி தென்படுவதாக ஆலய வளாக மக்கள் தெரிவிக்கின்றனர். (2-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் நான்கு முக்கிய தீர்மானம் எடுக்கப்பட்டது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் அதன் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் நிலைமைகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன.

இதில் முக்கிய சில முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு ஸ்தாபனமாகவும், சில கட்டுப்பாட்டுகள் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு கூட்டமைப்பை முன்னெடுத்து நடத்த வேண்டியிருப்பதனால் இவற்றை உள்ளடக்கிய யாப்பொன்று தயாரிக்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் தேசிய மாநாடுகளின் தீர்மானங்களுக்கேற்ப தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய பல்வேறுபட்ட மக்கள் அமைப்புக்களை உள்ளடக்கி தமிழ்த் தேசியச் சபையொன்றை நிறுவுவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

வடக்கு மாகாணசபை தொடர்பான விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கும், அதற்கான ஆலோசனைகளை பரிமாறிக்கொள்வதற்குமாக மாதாந்த கூட்டமொன்றை முதலமைச்சருடன் இணைந்து மேற்கொள்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை உருவாக்கும் பொருட்டும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்சட்டதிட்டவரை முறைகளுக்குக் கொள்கை களுக்கும் எதிராகவோ முரணாகவோ செயற்படுவோர் மீது ஒழுக் காற்று நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய வகையில் குழுவொன்றை அமைப்பது தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டது என அக்கட்சியினர் தெரிவித்துள்ளனர். (இ)

## ஒரு கோடி ரூபா பெறுமதியான தங்கக்கட்டிகளுடன் மூவர் கைது

டுபாயிலிருந்து சட்டவிரோதமாக ஒரு கோடி பெறுமதியான தங்கக் கட்டிகளை கொண்டு வந்த மூன்று பேர் நேற்று அதிகாலை 1.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

டுபாயிலிருந்து எமிரேட்ஸ் விமானம் மூலம் வந்த மூன்று பேரே தமது பைகளில் மறைத்து தங்கக் கட்டிகளை கொண்டு வந்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 2 கிலோ நிறையுடைய 20 தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ)

## கஞ்சா கடத்த முற்பட்ட மூன்று பேர் கைது

இலங்கைக்கு கஞ்சா கடத்துவதற்கு முற்பட்டதாகக் கூறப்படும் மூவர் கைதுசெய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து 50 இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சாவும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய நால்வரை தேடிவருவதாக வும் பொலிஸார் தெரிவித்தனர். இலங்கைக்கு கஞ்சா கடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதைத் தொடர்ந்து காரொன்றை இடைமறித்துச் சோதனையிட்ட போது 47 கட்டுக்களாக 5 பைகளில் பொதியிடப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டதாகவும் இவை ஒவ்வொன்றும் 20 கிலோகிராம் நிறையுடையவை எனவும் கியு, பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

காரில் பயணித்த மூவர் கைது செய்யப்பட்ட அதேவேளை, கஞ்சா கொள்வனவுக்கு வந்ததாகக் கூறப்படும் நால்வர் பொலிஸாரின் வாகனத்தை கண்டதால் தப்பியோடியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யானை தாக்கியதில் குடும்பப் பெண் பலி!

பொல்பிதிகம பகுதியில் யானை தாக்கி குடும்பப் பெண்ணொருவர் நேற்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் விவசாயக் கிணறு ஒன்றில் வீழ்ந்து வெளி வர முடியாதிருந்த காட்டு யானை ஒன்று வெளியேற்றப்பட்ட போது அதனைப் பார்வையிட வந்திருந்த பெண் ஒருவரை குறித்த யானை தாக்கியுள்ளது. சம்பவத்தில் 54 வயதுடைய பெண்ணே உயிரிழந்தவராவார்.

பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## ரஷ்ய ஜனாதிபதி புடின் இலங்கைக்கு விஜயம்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இலங்கைக்கு விஜயம் செய்ய வுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பினை ரஷ்ய ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி புடின் இலங்கை க்கு விஜயம் செய்ய உள்ளதாக இலங்கைக்கான அந்நாட்டு தூதரகம் தெரிவித்துள்ளது.

மிக நீண்ட இடைவெளியின் பின்னர் ரஷ்ய தலைவர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்ய வுள்ளார்.

புடினின் இலங்கை விஜயத்தின் போது பல்வேறு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனா, ஜப்பான் நாட்டுத் தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் ரஷ்ய ஜனாதிபதியும் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## பிரிட்டன் கூறும் விளக்கம்

## கடத்தப்படும் அனைத்து தமிழர்களும் ஆபத்துக்களை எதிர்நோக்கவில்லை

(கொழும்பு)

இலங்கைக்கு நாடு கடத்தப்படும் அனைத்து தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களும் ஆபத்துக்களை எதிர்நோக்கவில்லை என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

மெய்யாகவே பாதுகாப்பு அவசியமற்றவர்கள் இவ்வாறு நாடு கடத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

சர்வதேச ரீதியில் பாதுகாப்பு அவசியமில்லை எனக் கருதப்படும் தனி நபர்கள் மட்டுமே இலங்கைக்கு நாடு கடத்தப்படுகின்றனர் என சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் அனைவரும் ஆபத்துக்களை எதிர்நோக்கவில்லை என்றும் ஆபத்து இல்லை என்பதனை உறுதி செய்து கொண்டதன் பின்னர் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவதாக அந்நாட்டு அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. (இ)

## மாவனல்லையில் தீ பரவி விபத்து; 17 வர்த்தக நிலையங்கள் நாசம்!

கேகாலை மாவட்டம் மாவனல்லை நகரில் நேற்றுக்காலை ஏற்பட்ட திடீர் தீ காரணமாக நகரில் உள்ள சில வர்த்தக நிலையங்கள் அழிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ நேற்று புதன்கிழமை முற்பகல் பரவ தொடங்கியதாக பொலிஸார் கூறினர்.

மாவனல்லை நகர சபையின் தீயணைப்பு படையினர் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

எவ்வாறாயினும் இந்த தீயில் பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை நிலையம், உணவு விடுதிகள் என 17 வர்த்தக நிலையங்கள் அழிந்துள்ளன.

தீ பரவியதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மாவனல்லை நகரில் பெரும்பான்மையான முஸ்லிம் மக்களே வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு எதிராக பொதுபல சேனா அண்மைய காலமாக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில், நாசவேலை காரணமாக தீ ஏற்பட்டதா என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்படுகிறது. (இ)

## பிரிவுத்துயர் பகிர்வு



### கல்பனா சண்முகரட்ணம்

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கல்பனா சண்முகரட்ணம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி பாலசுப்பிரமணியம் செல்வரெத்தினம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் செல்வரெத்தினம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி ஐயாத்துரை செல்லம்மா

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை செல்லம்மா கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நீர்வேலி தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நீர்வேலி தெற்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி கணேசப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை

காரைநகர் ஆயிலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பின்னர் பூதவுடல் காரைநகர் சாம்பல் ஓடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி அரசரட்ணம் ஸ்ரீஞானலோஜினி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Hounslow ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அரசரட்ணம் ஸ்ரீஞானலோஜினி கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு Last Rituals at Home என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### கிருஷ்ணசாமி குமரகுரு

நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் Fredericia ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணசாமி குமரகுரு கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு Horsens vestre kirkegård, Silkeborgvej 40, 8700 Horsens, Denmark என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### தம்பு துரைராசா

சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு துரைராசா கடந்த 22 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### தயாபரன் சிவதர்ஷன்

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தயாபரன் சிவதர்ஷன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

## 80,000 சிகரெட்; ஒருவர் கைது

அரநாயக்க–அட்டாபிட்டிய பிரதேசத்தில் வைத்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ஒரு தொகை சிகரெட்டுக்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு 80 ஆயிரம் சிகரெட்டுக்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் நலப் பணியாளர்கள்?

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உச்ச நீதிமன்றம் தடையுத்தரவு

பணிநீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு அரசு மீண்டும் வேலை வழங்க வேண்டும் என்ற சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தர வுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

முன்னதாக, கடந்த ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி யன்று, பணி நீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிரந்தரப் பணி நியமனம் வழங்க வேண்டுமென சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றத்தில் வந்தபோது, மக்கள் நலப் பணியாளர்கள் சார்பில் ஆஜரான ஹரீஷ் குமார், கிராமங்களில் வசிப்பவர்களுக்கு கிராமங்களிலேயே வேலை வாய்ப்பை உருவாக்கி, அவர்கள் நகரங்களுக்கு இடம்பெயர்வதைத் தடுக்கும் விதத்தில், 1989இல் மக்கள் நலப் பணியாளர்கள் பணியில் சேர்க்கப்பட்டனர். அரசுகள் மாறும்போது அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவதும், மீண்டும் சேர்க்கப்படுவதுமாக இருக்கின்றனர். அவர்களுக்கு நிரந்தரத் தீர்வு தேவை என்று வாதிட்டார். தமிழக அரசின் சார்பில் ஆஜரான அட்டர்னி ஜெனரல முகுல் ரோஹத்கி, அவர்கள் தற்காலிகப் பணியாளர்களா கத்தான் சேர்க்கப்பட்டனர். எனவே அவர்களுக்கு நிரந்தரப் பணி வழங்க முடியாது என வாதிட்டர்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட உச்ச நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தர விட்டது. வழக்கின் விசாரணையையும் ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி ஒத்திவைத்தது.

உச்ச நீதிமன்றத்தின் இந்த உத்தரவு குறித்து, மக்கள் நலப் பணியாளர்கள் சங்கத்தின் தலைவரான மதிவாணனிடம் கேட்டபோது, எங்கள் தரப்பு வாதங்களை முழுமையாக முன்வைப்போம். இழந்த சலுகைகளையும் சேர்த்து உச்ச நீதிமன்றம் அளிக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று தெரிவித்தார். 1989 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது, அரசின் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காக மக்கள் நலப் பணியாளர்கள் என்ற பெயரில் 13 ஆயிரத்து 500 பேரை பணியில் அமர்த்தியது.

ஆனால், ஆட்சி மாறிய போது இவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அப்போது முதல் ஆட்சி மாறும்போதெல்லாம் இந்தப் பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்படுவதும் மீண்டும் சேர்க்கப்படுவதும் நடந் துவருகிறது என பது குறிப்பிடத்தக்கது. (இ)




பாரதச் செய்தி

# செவ்வாயின் சுற்றுவட்டப் பாதையில் இணைந்தது மங்கள்யான் விண்கலம்


## இந்திய விஞ்ஞானிகள் சாதனை; பிரதமர் நேரில் சென்று வாழ்த்து

செவ்வாய்க் கிரகத்திற்கு இந்தியா அனுப்பிய மங்கள்யான் விண்கலம் வெற்றிகரமாக செவ்வாயின் சுற்றுவட்டப் பாதையில் இணைந்தது.

இந்திய நேரப்படி நேற்று காலை 7.59 மணிக்கு இந்தத் தகவல் உறுதிப்படுத்தப் பட்டது.

இந்த நிகழ்வை பெங்களூரில் இருக்கும் இஸ்ரோ கட்டுப்பாட்டு அறையிலிருந்து பிரதமர் நரேந்திர மோடி நேரடியாகப் பார்வையிட்டார்.

செவ்வாய்க் கிரகம் வெற்றிகரமாக சுற்றுவட்டப்பாதையில் நுழைந்ததற்குப் பிறகு, அங்கிருந்த விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி தன் பாராட்டுகளைத் தெரிவித்தார்.



அதற்குப் பிறகு. அங்கு உரை நிகழ்த்திய பிரதமர் மோடி, வரலாறு இன்று நிகழ்த்தப்பட்டிருக்கிறது. இந்தியா முதல்முயற்சியிலேயே இதனை நிகழ்த்தியிருக்கிறது. இந்திய விஞ்ஞானிகள் சாதிக்க முடியாததை சாதித்துக் காட்டியிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

மங்கள்யான் செவ்வாயின் சுற்றுப்பாதையில் நுழைந்ததையடுத்து, இனி அந்த கிரகத்தின் புகைப்படங் களை மங்கள்யான் எடுத்து அனுப்பும். அதன் சுற்றுச்சூழலையும் ஆராயும்.

செவ்வாய்க் கிரகத்தின் வளிமண்டலத்தில் மீத்தேன் இருக்கிறதா என்பதை ஆராய்வதும் இந்தத் திட்டத்தின் முக்கிய பணிகளில் ஒன்று. உயிர்கள் வசிப்பதற்கான சூழல் செவ்வாயில் இருக்கிறதா என்பதை இதன் மூலம் கண்டுபிடிக்க முடியும்.

மங்கள்யானை செவ்வாயின் சுற்றுப் பாதையில் இணைப்பதற்காக, எஞ்சின்களை இயக்கி, வேகத்தை மட்டுப்படுத்தும் பணிகள் இந்திய நேரப்படி காலை 7.17 மணிக்குத் துவங்கின.

அப்போது லிக்விட் அபோஜி மோட்டார் எனப்படும் எஞ்சினும் 8 சிறிய எஞ்சின்களும் இயக்கப்பட்டன. 24 நிமிடங்களுக்கு இவை இயக்கப் பட்டு, மங்கள்யானின் வேகம் குறைக்கப்பட்டது.

சரியாக காலை 7.59 மணிக்கு மங்கள்யான் செவ்வாயின் சுற்றுவட்டப்பாதையில் இணைந்தது உறுதிப்படுத்தப்பட்டது.

மங்கள்யான் செவ்வாயின் சுற்றுவட்டப் பாதையில் இணைவதற்கு ஏதுவாக, அதன வேகம் குறைக்கப்பட வேண்டும். அதற்கென திரவ எரிபொருளில் இயங்கும் எஞ்சின்கள் பொருத்தப்பட்டிருந்தன. இந்த எஞ்சின்கள் எதிர்த்திசையில் இயங்கி, மங்கள்யானின் வேகத்தைக் குறைக்கும்.

ஆனால், கடந்த டிசெம்பரில் பூமியின் சுற்றுவட்டப் பாதை யிலிருந்து மங்கள்யான் விலகியதிலிருந்து பிறகு இந்த எஞ்சின்கள் இயக்கப்படவில்லை.

அதனால், கடந்த 22ஆம் திகதி, இந்த எஞ்சின்கள் சோதனை முயற்சியாக இயக்கிப் பார்க்கப்பட்டன. 3.98 விநாடிகளுக்கு இந்த எஞ்சின்கள் இயக்கிப் பார்க்கப்பட்டபோது அவை 99.6 சதவீதம் வெற்றிகரமாக இயங்கின.

### முதல் ஆசிய நாடு


இந்த மங்கள்யான் விண்கலம் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டது.

சுமார், 450 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. உலகில் வேறு கிரகங்களுக்கு விண்கலங்களை அனுப்பும் முயற்சியில்,மிகக் குறைந்த செலவில் மேற்கொள்ளப்பட்ட திட்டம் இதுதான்.

இதற்கு முன்பாக, அமெரிக்கா, ரஷ்யா, யுரோப்பியன் ஸ்பேஸ் ஏஜென்சி ஆகிய நாடுகள் மட்டுமே இதைச் சாதித்திருக்கின்றன.

ஆசியக் கண்டத்திலிருந்து இதனை நிகழ்த்தியிருக்கும் முதல் நாடு இந்தியா மட்டுமே என்பது குறிப்பிடத் தக்கது. (இ)

# வாலுடன் பிறந்த சிசு



இந்தியாவில் வால்போன்ற அமைப்புடன் சிசுவொன்று பிறந்துள்ளது. பிறந்து ஐந்து நாட்களேயான இச்சிசுவின் இடுப்புப்பகுதியில் 12 சென்றிமீற்றர் நீளமான வால் போன்ற அங்கமொன்று காணப்பட்டுள்ளது. இதனை வைத்தியர்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றியுள்ளனர்.

பெயர் சூட்டப்படாத இச்சிசு கருவில் உருவாகும்போது இரட்டை கருவை கொண்டிருந்துள்ளது. இருந்த போதிலும் குறித்த சிசுவின் உடன்பிறப்பு உடலமைப்பு ரீதியாக முழுமையாக வளர்ச்சியடையாததால் அதனது ஒரு பகுதி இந்த சிசுவின் உடலில் வால் போன்ற அமைப்பில் ஒட்டிகொண்டுள்ளது.

இவ்வால் சுமார் நான்கு மணித்தியால சத்திரசிகிச்சையின் பின்னர் அகற்றப்பட்டுள்ளது. அகற்றப்பட்ட இவ்வாலின் நிறை 350 கிராம் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளர்.

எனது நான்காவது குழந்தை இவ்வாறு பிறந்ததையிட்டு நான் மிகவும் கவலையடைகின்றேன். இந்தவால் போன்ற

# இளைஞரை வேட்டையாடிய வெள்ளைப்புலியால் பரபரப்பு

புதுடில்லி உயிரியல் பூங்காவுக்கு சுற்றுலா சென்ற இளைஞரை வெள்ளைப் புலி ஒன்று கடித்து கொன்றுள்ளது.

புலி நடமாடும் பகுதியின் சுற்றுச் சுவரிலிருந்து தவறி விழுந்த அந்த இளைஞரை புலி கடித்து கொன்றதாக அச்சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

சுற்றுச் சுவர் மிகவும் குறைந்த உயரத்துடன் இருந்ததால் அந்த இளைஞர் தவறி விழ நேரிட்டதாக கூறப்படுகிறது. புலி வசிப்பிடத்திற்குள் அந்த இளைஞர் தவறி விழுந்த போதிலும் முதலில் புலி அந்த இளைஞரை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அந்த இளைஞர் புலியை கல்லால் அடித்ததால் அது அவரை திருப்பி தாக்கத் தொடங்கியது.

அவரது கழுத்தை கவ்விய புலி, புரட்டிப் புரட்டி எடுதது கொன்றதாக அவர் மேலும் தெரிவித்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய விடயத்தில் நியாயம் தவறுபவன்; பெரிய விடயத்திலும் தவறுவான்.

– இயேசுநாதர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மயானம் - மனிதப்புதைகுழி தேவலோகத்தில் விசாரணை - 1

விசாரணைக்குழுக்கள் பூலோகத்தில் மட்டுமல்ல; மேலோகத்திலும் இருக்கவே செய்கிறது. உலக நாடுகளிடையே அமைதி, ஒற்றுமை என்பவற்றை ஏற்படுத்துவதற்காக, ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை போல தேவலோகத்திலும் ஐ.நா சபை உண்டு.

இங்கு பான் கீ மூன் செயலாளர். அங்கு யமதர்மராஜனே செயலாளர். பூலோகத்து ஐ.நா சபையின் செயலாளர் காலத்துக்கு காலம் மாற்றப்படுவார். அங்கு அவ்வாறான மாற்றம் இடம்பெறுவதில்லை. இங்கு ஐ.நா சபையும் தவறிழைக்கும். சுவர்ண புஷ்பங்களுக்கு இசைபட்டுப் போகும். ஆனால், தேவலோகத்தில் இருக்கக் கூடிய ஐ.நா சபையில் இவை எதற்குமே இடமில்லை.

இங்குள்ள ஐ.நா சபை உலக நாடுகளில் நடைபெறுகின்ற பிரச்சினைகள், யுத்தங்கள், அமைதிப் பேச்சுவார்த்தைகள், தீர்மானங்கள், அமைதிப்படையை அனுப்பும் நடவடிக்கைகள் என்பன தொடர்பில் கவனம் செலுத்தும்.

ஆனால் தேவலோகத்தில் யமதர்மராஜனின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கக் கூடிய ஐ.நா சபை பூலோகத்தில் நடைபெறும் அத்தனை விவகாரங்களையும் பதிவு செய்து கொள்ளும்.

ஒவ்வொரு தனி மனிதர்கள் தொடர்பிலும் அங்கு கோவைகள் பேணப்படும். இதற்கெல்லாம் இங்கு போல் தனித்தனி முகாமைத்துவ உதவியாளர்கள் கிடையாது.

சித்திரகுப்தன் என்பவர்தான் அங்கு முகாமைத்துவ உதவியாளர். எல்லாப் பதிவுகளும் அவர் என்பதால் அங்கெல்லாம் சம்பள ஏற்றங்கள் தொடர்பில் எந்தக் கால தாமதங்களும் ஏற்படுவதில்லை.

அதுமட்டுமன்றி இங்கு அரச பணியாளர்களுக்கு அறுபது வயதில் ஓய்வு கொடுக்கும் நடைமுறையுண்டு. இந்த நடைமுறையில் நாடுகளுக்கிடையில் வேறுபாடு இருக்கலாம்.

ஆனால் தேவலோகத்தில் இருக்கக்கூடிய நிர்வாகக் கட்டமைப்பில் பூலோகத்தில் இருப்பவர்களுக்கு ஓய்வு வழங்குதென்பது உரியவரின் உயிரை தேவலோகத்திற்கு எடுத்துக் கொள்வதாகும். இதற்கு வயது வேறுபாடு என எதுவும் கிடையாது.

இங்கிருக்கக் கூடிய ஒப்பந்த அடிப்படையிலான மீள்நியமனம், ஆறு மாதத்திற்கு நியமனத்தை நீடித்தல் என்ற நடைமுறைகளுக்கு அங்கு அறவே இடமில்லை. இவ்விதமாக பல வித்தியாசங்களைக் கூறிக் கொள்ளலாம். இத்தகைய வித்தியாசங்களை அறிந்து கொள்வது தர்மத்தை உணர்ந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்பதற்காகக் கூறினோம்.

இப்போது தேவலோகத்தில் யமதர்மராஜன் தலைமையில் விசாரணைக்குழு கூடுகிறது. அதுபற்றிய ஒரு கற்பனை நாடகம் இங்கு தரப்படுகிறது.

**இடம்** : யமதர்மராஜனின் மாளிகை

**தலைவர்** : யமதர்மராஜன்

**வழக்கு** : மயானத்திற்கும் புதைகுழிக்கும் வேறுபாடு உண்டா இல்லையா?

இதோ! விசாரணை ஆரம்பமாகிறது.

விசாரணைக்கான தொடக்க உரையை சித்திரகுப்தனார் வாசிக்கிறார்.

**சித்திரகுப்தன்** : யமதர்மராஜ பிரபு! இலங்கையில் சமகாலத்தில் மனிதப் புதைகுழிகள் தொடர்பிலான பிரச்சினைகள் எழுந்த வண்ணமுள்ளன.

அங்கு மயானத்தில் தான் மனிதர்களின் உயிரற்ற உடல்களைப் புதைப்பார்கள்.

ஆனால் இலங்கையின் வட மாகாணத்தில் மனிதர்கள் எங்கெல்லாம் புதைக்கப்பட்டார்களோ அவையெல்லாம் மயானம் என்று சொல்லப்படுகிறது.

இது தான் இன்றைய விசாரணைக்குரிய விடயப் பொருள்.

(தொடரும்...)

# மகிந்தவின் நீண்டகாலக் கனவை ஊவா மாகாணத் தேர்தல் தகர்த்தது

## மனோ கணேசன் தெரிவிப்பு

ஊவா மாகாணசபை தேர்தல், எதிரகாலத்தில் நடைபெறவுள்ள தேசிய மட்ட தேர்தல்களின் முன்னோடி என்று தேர்தலுக்கு முன்னரே நாம் கூறினோம். அது இன்று சரியாக நடந்து விட்டது. இந்த தேர்தலில் மக்கள், குறிப்பாக சிங்கள மக்கள், அரசாங்கத்துக்கு ஒரு செய்தியை கூறியுள்ளார்கள். யுத்த வெற்றி என்ற கோஷத்தை அரசியல் சந்தையில் விலைக்கு வாங்க இனிமேலும் நாங்கள் தயாரில்லை என்று அரசாங்கத்துக்கு அவர்கள் சொல்லியுள்ளார்கள். இதனால் யுத்த வெற்றி என்ற கோஷத்தின் மீதான கவர்ச்சி குறைந்து வருவது இப்போது கண்கூடாக தெரிகிறது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், அடுத்த 25 ஆண்டுகளுக்கு மகிந்த சிந்தனை ஆட்சியே என்ற கனவுக் கோட்டை தகர தொடங்கி விட்டது. இது இன்று அரச உயர் மட்டத்தை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது.

2040 ஆம் ஆண்டுவரை ராஜபக்ஷர்களின் ஆட்சியே என்று கூறி தங்கள் தடம்புரள்கைகள், தடுமாற்றங்கள் மற்றும் அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள், இன-மதவாத கொள்கைகள் ஆகிய அனைத்து குற்றங்களையும மூடி மறைக்க எத்தனித்தவர்களின் கனவுகளில் மண் விழுந்து விட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்று புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்ற போது, அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊவா மாகாண மக்கள் எதிரணிக்கும் ஒரு செய்தியை தந்தார்கள். குறிப்பாக உட்கட்சி சச்சரவுகளை தீர்த்து கொள்ளுங்கள் என்று பிரதான எதிர்க் கட்சிக்கு சொன்னார்கள்.

இந்த செய்தியை சிரமேற்கொண்டு ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது கட்சிக்குள்ளே பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்துள்ளார். அந்த மாற்றங்கள் சிறந்த பெறுபேறுகளை தர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

ஆனால், அரசாங்கத்துக்கான செய்தி தான் பிரதானமானது. அதை கணக்கில் எடுக்கும்படி அரசுக்கு நான் கூறுகிறேன். கனவுலகில் இருந்து இறங்கி வந்து, தரையில் நிகழும் மாற்றங்களையும், யதார்த்தத்தையும் கண்களை திறந்து பார்க்கும்படி அரசாங்கத்துக்கு நான் கூறுகிறேன்.

ஏனென்றால் இத்துணை பெரிய வீழ்ச்சியையும் மூடி மறைத்து ஒன்றுமே நடக்கவில்லை என அரசாங்கத்தின் அமைச்சர்கள் சமாளிக்க தொடங்கியுள்ளார்கள்.

எதிரணியினர் அனைத்து துருப்பு சீட்டுகளையும் பயன்படுத்தி இந்த பெறுபேறுகளை பெற்றுள்ளார்கள் என அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க கூறுகிறார்.

உண்மையில் அரசாங்கம்தான் தனது மிகப்பிரதான துரும்பு சீட்டை பயன்படுத்தியது. அந்த சீட்டின் பெயர் மகிந்த ராஜபக்ஷ. இதைவிட வேறு ஒரு துரும்பு சீட்டு அங்கு இல்லை. ஜனாதிபதி மகிந்த, தெருத்தெருவாக, வீடு வீடாக, கிராமம் கிராமமாக சென்று, வாக்கு சேகரித்தார். இதை நாம் ஊவாவில் இருந்து பார்த்தோம். இப்படி தங்கள ஒரேயொரு அதியுயர் துருப்பு சீட்டை பயன்படுத்தித்தான் இந்த அற்ப பெறுபேற்றையாவது அரசாங்கம் பெற்றுக் கொண்டது.

நாங்கள் ஒரு இள்ளஞனை மட்டுமே பயன்படுத்தினோம். அந்த இளைஞனின் பெயர் ஹரின். எதிர்காலத்து தேர்தல்களுக்கு நாம் பயன்படுத்தும் துரும்புகள் பல உள்ளன. உரிய நேரத்தில் அவை வெளிவரும். இனியாவது திருந்துங்கள். இனவாதத்தையும், மதவாதத்தையும், அடிப்படை வாதத்தையும பயன்படுத்தி, சோரம் போனவர்களை பயன்படுத்தி எங்களை ஆள நினைக்காதீர்கள் என மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (இ)

# புகலிடக்கோரிக்கையாளர்களை கம்போடியாவுக்கு அனுப்புவது உறுதி

## அவுஸ். குடிவரவு அமைச்சர்

புகலிடக் கோரிக்கையாளர்கள் விடயத்தில் கம்போடியா அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்ததை உறுதி செய்துள்ளார் அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் மொரிசன்.

படகுகள் மூலம் விசா இல்லாமல் வந்தவர்களையும் நவ்ரு, மனுஸ், பப்புவா நியூகினியா தீவுகளில் உள்ளவர்களை கம்போடியாவுக்கு அனுப்புவதற்கான ஒப்பந்தம் செய்துள்ளதாக குடிவரவு அமைச்சர் மொரிசன் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு எதிர்க் கட்சிகள் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளது. இதற்கு மொரிசன், கிலாரட் பதவியில் இருந்த போது புகலிடம் கோரியவர்களை மலேசியா அனுப்பியது போல இதுவும் அதே நடைமுறை போன்றதுதான் என விவாதித்துள்ளார்.

இந்த நடவடிக்கையானது மனித உரிமை மீறலாகும் என மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

கம்போடியாவில் அகதிகள் வாழ்வதற்கான சரியான சூழலும் இல்லை எனவும் தெரிவித்துள்ளது. (இ)

# மீனவர்களுக்கு விளக்கமறியல்

தலைமன்னார் கடற்பரப்பில் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நிலையில், கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை தொடர்ந்தும விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம், 36 இந்திய மீனவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று உத்தரவிட்டார்.

குறித்த இந்திய மீனவர்கள் கடந்த 9 ஆம் மற்றும் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டதாக மன்னார் மீன்பிடி ஆய்வாளர் அலுவலகம தெரிவித்துள்ளது. கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். (எ-11)

# சத்திய தரிசனம்



## அன்பு ஊற்று பெருகட்டுமே

❖ காண்பதை எல்லாம் கடவுள் நிலைக்கு உயர்த்தும் பக்குவத்தை வளர்க்க வேண்டும்.


❖ விதை முளைத்து மரமாகி கனி தருவது போல, மனிதனும் வளர்ந்து சமுகத்திற்கு நன்மை அளிக்க வேண்டும்.

❖ உள்ளத்தில் அன்பின் ஊற்று இல்லாவிட்டால், வழிபாடு என்னும் கருவியால் தோண்டி அன்பைப் பெருகச் செய்யுங்கள்.

❖ கடவுள் கைகளை நமக்கு அளித்திருக்கிறார். நம்பிக்கையுடன் உழைத்தால் வாழ்வு வளம் பெறும்.

❖ அறிந்தாலும் அறியாவிட்டாலும் நீங்கள் ஒவ்வொருவரும் கடவுளே. அதை நாம் அறிய முற்படுவதில்லை.

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



## தினசரி வாழ்வில் எதிர்மறைச் சிந்தனைகள்

✦ நம்மீது நமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். இதை நம்மாற் செய்யமுடியுமா? என்ற சந்தேகம் வந்துவிட்டால் அச்சம் வந்து விடுகிறது.

நம்மால் வெற்றியடைய முடிவதில்லை. நம்மால் முடியும் என்றும் நாம் செய்து விடுவோம் என்றும் உறுதியாக இருந்தீர்களானால் நம்முடைய நம்பிக்கையைக் கண்டு நமக்குப் பிறர் உதவவம் செய்வார்கள்.

அடுத்தவனைப் பார்த்து பொறாமைப்பட்டால் ஆதங்கம் வருகிறது. நம்மால் எதையும் சாதிக்க முடியும் என நினைப்பவர்களுக்குப் பொறாமை வருவதில்லை. அப்படி இயலாதவர்களுக்குத்தான் பொறாமை வருகிறது.

நம்மால் இதைச் செய்ய முடியுமா என்பதை உறுதி செய்துகொண்டு ஆரம்பித்ததும் எதிர்மறைச் சிந்தனைகளைத் தவிர்த்துச் செயலாற்றினால் எந்தக் காரியத்திலும் நாம் வெற்றி பெறுவோம் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மத்திய கல்லூரியை வீழ்த்தி சம்பியனானது கல்முனை சாஹிரா





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை வீழ்த்திச் சம்பியனானது கல்முனை சாஹிரா கல்லூரி அணி.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை மற்றும் அகில இலங்கை பாடசாலை கிரிக்கெட் சம்மேளனம் ஆகியன இணைந்து யாழ்ப்பாணத்தில் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் 17 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியை நடத்தியது.

இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் கல்முனை சாஹிரா கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கல்முனை சாஹிரா அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கமைய் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 48.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் கிருபாகரன் 50 ஓட்டங்களையும் அலன்ராஜ் 21 ஓட்டங்களையும் திரேஷன் 18 ஓட்டங்களையும் கௌதமன் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நஜிட் மௌலானா, அப்பிரி தலா 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

174 ஓட்டத்தினை எடுத்தால் வெற்றி என களமிறங்கிய கல்முனை சாஹிரா கல்லூரி 41.2 ஓவர்களில் 6 விக்கெட்டினை இழந்து 177 ஓட்டத்தினை பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் நிலா 55 ஓட்டங்களையும் நஜித் மௌலானா ஆட்டமிழக்காது 58 ஓட்டங்களையும் அப்பிரி 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் தனுசன் 6 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களையும் விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கௌதமன் 6 ஓவர்கள் பந்துவீசி 49 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக கல்முனை சாஹிரா கல்லூரி அணி வீரன் நஜித் மௌலானா தெரிவானார். (கு)

## சர்வதேச பிறீமியர் டென்னிஸ் ரொஜர் பெடரர் பங்கேற்பு

இந்தியாவில் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் சர்வதேச பிரீமியர் டென்னிஸ் போட்டித் தொடரில் உலகின் முன்னணி டென்னிஸ் வீரரான ரொஜர் பெடரர் விளையாடவுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே ரபால் நடால் இந்த தொடரில் விளையாடுவது உறுதி செய்யப்பட்டு இருந்த போதும் அவரின் உடல் உபாதை காரணமாக விலகிக்கொண்டார். இதனைத் தொடர்ந்தே ரொஜர் பெடரர் இந்த தொடரில் இணைந்துள்ளார்.

தான் இந்தியாவில் விளையாட ஆசைப்படுவதாகவும், தனக்கு இந்தியாவில் ரசிகர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் தன்னை விரும்புகின்றார்கள் என்பதையும் அறிந்துள்ளதாகவும் ரொஜர் பெடரர் கூறியுள்ளார்.

எனவே இந்த தொடரின் போது உங்கள் அனைவரையும் டிசெம்பர் மாதம் அங்கே சந்திக்கின்றேன்என பதிவு செய்து அனுப்பியுள்ள தகவலில் தெரிவித்துள்ளார்.

4 அணிகள் பங்கு பற்றும் இந்த தொடரில் அமெரிக்காவின் முன்னாள் டென்னிஸ் வீரர் பீட் சாம்ராஸ் உடன் இணைந்து விளையாடவுள்ளார். இந்த தொடர் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை இந்தியாவின் புதுடில்லியில் நடைபெறவுள்ளது. (க)

## சுப்பர் கிங்ஸ் பந்துவீச்சில் முன்னேற்றம் தேவை-டோனி



டொல்பின்ஸ் அணிக்கெதிராக சென்னை அணி வெற்றி பெற்றாலும் பந்துவீச்சில் முன்னேற்றம் தேவை என சென்னை அணித்தலைவர் டோனி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பெங்களூரில் நடநத ஆட்டத்தில் சென்னை- டொல்பின்ஸ் அணிகள் மோதின. இதில் சென்னை அணி 54 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டொல்பின்ஸை வீழ்த்தி முதல் வெற்றியை பெற்றது.

முதலில் விளையாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 242 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் விளையாடிய டொல்பின்ஸ் 20 ஓவரில் 188 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் 54 ஓட்டங்களில் சென்னை அணி வெற்றி பெற்றது.

இந்த வெற்றி குறித்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணித்தலைவர் டோனி கூறுகையில்,

ரெய்னா, மேக்குல்லம் ஆட்டம் அதிரடியாக இருந்தது. இருவரும் சிறப்பான தொடக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

இதனால் பின்னர் வந்த வீரர்கள் சரியாக பயன்படுத்திக் கொண்டனர். இந்த போட்டியில் கிண்ணத்தை வெல்ல வேண்டுமானால் பந்துவீச்சாளர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தி சிறப்பாக வீச வேண்டும்.

நமது பந்து வீச்சாளர்கள் சற்று திணறுகிறார்கள். ஆனால் கூடுதலாக 15 முதல் 20 ஓட்டங்களை கொடுத்து விட்டனர். ஒவ்வொரு முறையும் துடுப்பாட்டக்காரர்களால் 240 ஓட்டங்களை குவிக்க இயலாது. அதனால் பந்துவீச்சில் இன்னும் முன்னேற்றம் தேவை என்று கூறியுள்ளார்.

3 ஆவது ஆட்டத்தில் சென்னை அணி வருகிற 25ஆம் திகதி லாகூர் லயன்சை எதிர்கொள்கிறது. டொல்பின்ஸ் அணிக்கு இது 2 ஆவது தோல்வியாகும். (க)

## மின்னொளியிலான தாச்சிப் போட்டி; ஆலடி சிந்து, வள்ளுவர் வெற்றி



பண்டத்தரிப்பு குஞ்சன்கலட்டி அறிவொளி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சிப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. அண்மையில் நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விபரங்கள் வருமாறு, இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணி 12:5 என்ற பழங்கள் வித்தியாசத்தில் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி 12:3 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (கு)

## சதுரங்க சுற்றுப் போட்டி

வடமராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்படும் தனிநபர் சதுரங்கச் சுற்றுப்போட்டி இன்று வியாழக்கிழமை முதல் இரு தினங்கள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

6 வயது முதல் 10 வயது வரையான மாணவர்களுக்கான போட்டிகள் இன்று வியாழக்கிழமையும் 11 வயது தொடக்கம் 15 வயது வரையான மாணவர்களுக்கான போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் குறித்த தினங்களில் வருகை தந்து போட்டிகளில் பங்குபற்றலாம்.

போட்டியாளர்கள் பிறந்த திகதி, வயது, சேர்வு இலக்கம், கல்வி கற்கும் தரம் என்பன பாடசாலை அதிபர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் அறிவித்துள்ளார். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையிறுதியில் கொல்கத்தா



சூரியகுமாரின் போராட்டகரமான அதிரடித் துடுப்பாட்டம் கைகொடுக்க 2 பந்துகள் மீதமிருக்கையில் 3 விக்கெட்டுக்களால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி திரில் வெற்றி பெற்றதுடன் அரையிறுதி வாய்ப்பையும் பிரகாசப்படுத்திக் கொண்டது.

6-வது சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரின் 10-வது லீக் போட்டி குழு ஏயைச் சேர்ந்த ஆஸியின் பேர்த் கோச்சர்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கு இடையில் நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பேர்த் கோச்சர்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவ்வணிக்கு ஆரம்ப வீரர்களாக களமிங்கிய சிம்மன்ஸ் - அணித் தலைவர் வோஜஸ் இணை சிறப்பான பங்களிப்பை (68) வழங்கிய போதிலும் தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் போதியளவு பிரகாசிக்கத் தவறியமையால் பேர்த் கோச்சர்ஸ் அணியால் 20 ஓவர்களின் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் இறுதிவரை போராடிய அணித் தலைவர் வோஜஸ் ஆட்டமிழக்காமல் 71, சிம்மன்ஸ் 39 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் கொல்கத்தா அணி சார்பில் நரேன் 4, குல்டிப் யாதவ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

152 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த கொல்கத்தா அணி தனது ஆரம்ப விக்கெட்டுக்களை வெகு சீக்கிரமாக இழந்து தடுமாறிக் கொண்டிருந்தது.

ஒருகட்டத்தில் அவ்வணி 87 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

எனினும் அதன்பின்னர் களமிறங்கிய சூரியகுமார் யாதவ் தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் போட்டியை மாற்றி தோல்வியின்பால் சென்று கொண்டிருந்த கொல்கத்தா அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.


இறுதியில் கொல்கத்தா அணி 19.4 ஓவர்களின் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (153) அடைந்தது.

துடுப்பாட்டத்தில் கொல்கத்தா அணி சார்பில் இறுதிவரை போராடிய சூரியகுமார் யாதவ் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

போட்டியின் ஆட்டநாயகனாக குல்டிப் யாதவ் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் கொல்கத்தா அணி அரையிறுதி வாய்ப்பைப் பெற்றது. (க)

# கோவா கால்பந்து அணியின் உரிமையாளரானார் கோலி



இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து தொடரில் பங்கேற்கும் கோவா அணியின் சக உரிமையாளராக நீடிக்கப்போவதாக இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி தெரிவித்துள்ளார்.

25 வயதில் ஒரு கால்பந்து அணியின் உரிமையாளராக இருப்பது என்ற தனது முடிவில் கோலி உறுதியாக உள்ளார்.


கோவா அணியின் சீருடை அறிமுக விழா நேற்று மும்பையில் நடைபெற்றது. இதில் கருத்து தெரிவித்த கோலி,

நான் இள வயதிலேயே கால்பந்து அணிக்கு உரிமையாளராக மாறியதாக சிலர் நினைக்கக் கூடும். ஒரு விடயத்தின் மீது நம்பிக்கை வைத்து விட்டால், நூறு சதவீதம் நம்மை அதில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் கால்பந்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த முடிவை எடுத்துள்ளேன். அதேநேரத்தில் எதிர்கால முதலீட்டுக்கான களமாகவும் இதை கருதுகிறேன்.

ஐபிஎல் தொடருக்கும் ஆரம்பத்தில் எதிர்ப்பு இருந்தது. ஆனால், ஐபிஎல் மூலம் இளம வீரர்கள் பயனடைந்துள்ளனர். அதேபோல, ஐஎஸ்எல் தொடரின் மூலம் இளம் வீரர்கள் பயனடைவர் என கோலி தெரிவித்துள்ளார். (க)

# இலங்கை பயிற்றுவிப்பாளராக மாவன் அத்தபத்து நியமனம்



இலங்கை கிரிக்கெட் அணியின் பிரதம பயிற்றுவிப்பாளராக மாவன் அத்தபத்து நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறைவேற்றுக்குழு நேற்று கூடியபோது இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

மாவன் அத்தபத்து சமீபத்தில் இலங்கையில் நடைபெற்ற தென் ஆபிரிக்க மற்றும் பாகிஸ்தானுக்கு எதிரான கிரிக்கெட் தொடர்களின் போது இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டிருந்தார்.

இலங்கையின் முன்னாள் அணித்தலைவரும், நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான அவர் 90 டெஸ்ட் போட்டிகளில் 6 இரட்டை சதங்கள் அடங்கலாக 5,502 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

268 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர் 8,529 ஓட்டங்களைக் குவித்துள்ளார். (க)

# பாகிஸ்தான் வீரர்களுக்கு அபராதம்

தங்கள் உடற்தகுதியை பாதுகாக்க தவறிய நான்கு பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின வீரர்களுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அபராதம் விதித்துள்ளது. சஹிட் அப்ரிடி, உமர் அக்மல், அப்துர் ரெஹ்மான், ரஸா ஹசன் ஆகிய வீரர்களுக்கு அபராதம் விதிகக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாதத்தில் இருந்து நான்கு மாதங்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினால் வழங்கப்படும் ஊதியத்தில் 25 வீதம் தண்டமாக அறவிடப்பட்டுள்ளது.


பாகிஸ்தானின் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 29 பேரும் சோதனைகளில் ஈடுபட வேண்டும் என அறிவிக்கப்பட்டு இருந்த போதும் 26 பேர் சோதனைகளில் ஈடுபட்டனர். அவர்களில் 16 பேர் சித்தியெய்தியுள்ளனர்.

இவர்களில் ஷான் மசூட், உமர் அமின் ஆகியோர் உயரிய சித்திகளைப் பெற்றுள்ளனர். அவர்கள் இருவருக்கும் ஓகஸ்ட் மாதத்தில் இருந்து நான்கு மாதங்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினால் வழங்கப்படும் ஊதியத்தில் 17.5வீதம் மேலதிகக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது. மிஸ்பா உல் ஹக், அஹமட் செஷாட், பிலவால் பாட்டி ஆகியோருக்கு 10வீதம் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

நசீர் ஜெம்ஷெட், வஹாப் ரியாஸ், சைட் அஜ்மல் ஆகியோர் சோதனைகளில் ஈடுபட வில்லை. பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் தங்கள் உடற்தகுதிகளை பேணுவதில்லை என சந்தேகம் இருந்த நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை குறித்த உடற் தகுதி சம்மந்தப்பட்ட ஒப்பந்தம் ஒன்றை வீரர்களுக்கான ஒப்பந்தத்தில் உள்ளடக்கியுள்ளது.




# பட்மின்டன்: சாய்னா வெற்றி



ஆசிய விளையாட்டு பட்மின்டன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய வீராங்கனைகள் சாய்னா நேவால், பி.வி.சிந்து ஆகியோர் முதல் சுற்றில் வெற்றி பெற்றனர்.

சாய்னா 21-10, 21-8 என்ற நேர்செட் கணக்கில் மக்காவுவை சேர்ந்த டெங்கையும், பி.வி. சிந்து 21-7, 21-13 என்ற கணக்கில் வாங்கையும் (மக்காவு) தோற்கடித்தனர். பெண்கள் ஸ்குவாஷ் அணிகள் பிரிவில் இந்தியா 2-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த தர்மத்துக்கு ஏற்ப வாழும் நாடு ஒன்று அவசியம்

## பொது பல சேனா தெரிவிப்பு

பௌத்தர்களைப் பார்த்து குரைத்தவர்க ளுக்கு இம்முறை ஊவா மாகாண சபைத் தேர்தல், நல்லதொரு பாடத்தை கற்பித்திருக் கிறது என்று பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்தர்களைப் பார்த்து குரைத் துக்கொண்டிருப்பவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பிறந்த மண்ணில் இன்று நாம் தேவையற்றவர்க ளாகி உள்ளோம். பௌத்த தர்மத்துக்கு ஏற்ப வாழும் நாடொன்று அவசியம். அந்த மாற்ற த்துக்காக இந்த நாடு அணிவகுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். உலகிலுள்ள அனைத்து தலைவர்களும் தங்களது வரலா ற்றின் அடி, நுனியைத் தேடிச் சென்றுகொண்டி ருக்கிறார்கள். ஆனால், எமது நாட்டின் தலை வர்கள் அது தொடர்பில் வாய் திறப்பதில்லை.

இந்த நாட்டு அரசியல்வாதிகள் தொடர்பில் மக்கள் விரக்தியடைந்துள்ளனர். நாடாளுமன் றத்திலுள்ள எம்.பி.க்களில் நூற்றுக் கணக் கானோர், சாதாரண தரம் கூட சித்தியடையாத வர்கள். சிங்கள பௌத்தர்களைப் பார்த்து குரைப் பவர்கள் இதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று ஞானசார தேரர் மேலும் கூறினார்.

## மக்களைப்...

தேசிய பொதுச் செயலாளர் முரளிதர்ராவ், கட்சியின் வெளிவிவகார அழைப்பாளர் விஜய் ஜொலி ஆகியோர் நேற்று முன்தினம் பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமை யிலான குழுவினரை சந்தித்து பேச்சுவார் த்தை நடத்தியிருந்தனர்.

கிருலப்பனையில் உள்ள பொது பல சேனா வின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போதே தமது செயற்பாட்டி ற்கு இந்தியா துணை நிற்கவேண்டும் என்று பொது பல சேனா அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் பொது பல சேனா வின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டிலந்த விதானகே கருத்து தெரிவிக்கையில்,

பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், தேசிய அமைப்பாளர் விதாரந்ததீய நந்ததேரர் ஆகியோர் மேற்கொண்டிருந்தோம்.

இந்திய - இலங்கை உறவு முறை மிக நீண்ட காலமாக உள்ளது. அரசியலுக்கு அப்பால் கலாசார பொருளாதார ரீதியிலும் இரு நாடு களும் நல்ல உறவினை மேற்கொண்டு வரு கின்றது.

அதேபோல் இந்து பௌத்த உறவு முறை யும் மிக நல்ல நிலையில் நிலவுகின்றது. எனவே, இவற்றினை மேலும் பலப்படுத்த வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்கள் சிங்கள மக் களுடன் நல்ல உறவினை ஏற்படுத்தி வருகி ன்றனர். இது மேலும் பலமடைய வேண் டும். அதேபோல் பௌத்த - இந்து தொடர்புக ளும் நெருக்கமானவையே.

ஆகவே, தொடர்ந்தும் இந்திய - இலங்கை உறவு முறையானது அரசியல், கலாசார மத அடிப்படையில் பலமடைய வேண்டும்.

மேலும், தமிழ் மக்களின் பிரச்சினைக் கான தீர்வுகளை பெற்றுத்தருவதில் பொது பல சேனா துணை நிற்கும்.

அதேபோல் இலங்கையில் பௌத்த தமிழ மக்களை அழிக்கும் இனவாத செயற்பாடுகளை தடுத்து தமிழ் - சிங்கள மக்களை பாதுகாப் பதிலும் நாம் அக்கறை செலுத்துவோம்.

எனவே, இந்தியாவும் இவ்விடயங்களில் எமக்கு துணை நிற்க வேண்டும் எனவும் நாம் அவர்களிடம் எடுத்துரைத்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார். (எ-11)

## உலகத்...

ஜனாதிபதி, நேபாள பிரதம அமைச்சர் சுசில் கொய்ரால, கொலம்பியன் ஜனாதிபதி ஜுவான் மனுவெல் சந்தோஷ் கால்டெரன் மற்றும் பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா ஆகியோரைச் சந்தித்தார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவும் நேபாள பிரதம அமைச்சர் கொய்ராலவும் எதிர்வரும் சார்க் உச்சி மகாநாடு உள்ளிட்ட பரஸ்பர முக்கிய த்துவம் வாய்ந்த பல விடயங்கள்பற்றி பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

18ஆவது சார்க் உச்சி மகாநாடு இவ் வருடம் நவம்பர் மாதம் காத்மண்டுவில் நடை பெறும். அந்த மாநாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துகொள்வார் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

கொலம்பியன் ஜனாதிபதி கால்டெரன் அவர்களுடனான பேச்சுவார்த்தையின்போது தென் அமெரிக்க நாடுகளுடனான நல்லுறவைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பாக ஜனாதி பதி ராஜபக்ஷ கலந்துரையாடினார்.

இம்மாதம் ஆரம்பத்தில் இலங்கைக்கான கொலம்பியன் தூதுவர் திருமதி மொனிக்கா லென்செட்டா மியுட்டிஸ் கொழும்பில் ஜனா திபதி ராஜபக்ஷவிடம் தனது நியமனக் கடித த்தை கையளித்தார்.

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் சர்மாவுடன் இடம்பெற்ற பேச்சு வார்த்தையில் பொதுநலவாய விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி கலந்துரையாடினார். அதில் பொதுநலவாய அரச தலைவர்களின் மகாநாட்டின் சீராக்கம் சம்பந்தமாக இவ்வார இறுதியில் நடைபெறவிருக்கும் கூட்டம் சம் பந்தமாகவும் 2015ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் பற்றியும் கலந் துரையாடப்பட்டது.

இவ் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல்.பீரிஸ், நீர்ப்பாசன நீர் வளங்கள் அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா, சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தகு வலு அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருமதி ஷெனுகா செனவிரத்ன, ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிர ந்தர பிரதிநிதி கலாநிதி பாலித கொஹன, ஐக் கிய அமெரிக்காவுக்கான இலங்கைத் தூது வர் பிரசாத் காரியவசம், பிரதி நிரந்தர பிரதி நிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகி யோரும் கலந்து கொண்டனர். (எ-11)

ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படிக்க
மாதம் ஒரு லட்சம் வரை உழைக்க
4 வருட விசா பெற வெறும் 6 இலட்சம் போதும்

- நேர்முகத்தேர்வு இல்லை. 100% விசா உறுதிப்பாடு
- IELTS தேவையில்லை
- விமான நிலையத்திலிருந்து இலவசமாக அழைத்துச் செல்லல்
- O/L உடன் 19 வயது மட்டும். A/L சித்தி எனின் 33 வயது.
- பகுதிநேர தொழில் ஒழுங்குகள்.

தங்குமிட ஒழுங்குகள் எம்மால் மேற்கொள்ளப்படும்.
நிபந்தனைகளுக்கமைவாக
முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம் (PV 82703)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(7870)
குறிப்பு:10 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.



## விமானத் தாக்குதல் இலங்கை எதிர்ப்பு

பயங்கரவாதிகள் மீதான ஆளில்லா உளவு விமானத் தாக்குதல்கள் சர்வதேச மனித உரிமைகளை மீறும் வகையில் அமைந் திருப்பதாக இலங்கை குற்றம் சாட்டியுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரி மைகள் அமர்வில் கலந்து கொண்ட இலங்கை யின் பிரதிநிதி இக்குற்றச்சாட்டை முன்வை த்துள்ளார்.

ஆளில்லா உளவு விமானத் தாக்குதல் கள் மனித உரிமைகளை மீறுவதாக மட்டு மன்றி, மனிதாபிமானத்தையே கேள்விக் குறியாக்கும் வகையில் உள்ளன.

இலங்கை பயங்கரவாதத்தை எதிர் கொண்டு வெற்றிகண்ட நாடு. பயங்கரவாதிகள் அழி க்கப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் மனித உரிமைகள் மீறப்படக் கூடாது.

உலகின் பல்வேறு நாடுகள் ஆளில்லா உளவு விமானங்களை கண்காணிப்பு நட வடிக்கைகளுக்காக மட்டுமே பயன்படுத்து கின்றன. ஒரு சில நாடுகள்தான் இவற்றில் ஆயுதங்களைப் பொருத்தி தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

இதற்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இலங்கை வலியுறுத்தியுள்ளது (எ-11)

## தடம் புரண்டது...

பளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்து கொண்டிருந்த யாழ்தேவி ரயில் மஹாவ பிரதேசத்தில் தடம் புரண்டுள்ளது.

நேற்று பிற்பகல் 3.30 அளவில் ரயில் தடம் புரண்டதாக ரயில் கட்டுப்பாட்டு நிலை யம் தெரிவித்தது.

இதனால் வடக்கு ரயில் பாதையின் ரயில் பயணங்கள் மஹாவ வரை மாத்திரமே இடம் பெறும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. (எ-11)

## பொது...

நாடுகள் தலைவர்கள் கூட்டமொன்று நியூ யோர்க்கில் நடைபெறவுள்ளதாகவும், இதில் இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வரும் பிரித்தானிய பிரதமர், கனே டிய பிரதமர் ஆகியோரும் பங்கேற்க உள்ள தாகவும் தெரிவிக் கப்படுகிறது. (எ-11)

## தேசியப்...

தேசிய இனப் பிரச்சினைக்கு எவ் வாறு தீர்வு காண் பது, தீர்வுத் திட்ட த்திற்கு அமைய எவ்வாறு அரசியல் அமைப்பில் மாற்றம் செய்யப்பட வேண் டும் என்பது குறித்து கவனம் செலுத்தப் பட உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான பிரதிநிதிகளும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலை வர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான பிரதிநிதிகளும் சந்திக்கவுள்ளனர்.

தேசிய இனப் பிரச்சினை குறித்து ஸ்ரீ லங்கா முஸ் லிம் காங்கிரஸின் நிலைப்பாடு இந்த சந்திப்பின் போது வெளிப்படுத்தப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள் ளார். (எ-11)

## மாகாண சபை...

யில் ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் உறு ப்பினர் சிவாஜிலிங்கத்தின் பிரேரணை தொடர்பிலும் சபையில் எடுத்துக் கொள்ள ப்படும். (எ-11)

## 25 பேருக்கு...

நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், இராணுவத்தினருடைய உதவியுடன் துப்புர வாக்கும் பணிகளையும் மாநகர சபை ஊழி யர்கள் மேற்கொண்டதாகவும் கூறினார்.

டெங்கு நோயாளர்கள் இனங்காணப் பட்ட பகுதிகளில் விசேடவிதமான நுளம்பை அழிக்கும் நடவடிக்கைகளையும், உதவிக ளையும், ஆலோசனைகளையும் வழங்கி வரு வதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

## ஹிலாரியுடன்...

செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கும் இடை யில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் இடம்பெற்ற காலநிலை உச்சி மாநாட்டில் வைத்தே, ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ, ஹிலாரியை சந்தித் துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை நியூயோர்க்கில் வைத்து உலக நாடுகளின் தலைவர்கள் பலரையும் ஜனாதிபதி மகிந்த சந்தித்திருக்கிறார்.

நேபாள பிரதமர் சுசில் கொய்ராலா, கொலம் பிய ஜனாதிபதி ஜுவான் எம்.செந்தோஸ், பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாய கம் கமலேஷ் சர்மா ஆகியோரை சந்தித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி, கொலம்பியாவுடன் இரு தரப்பு நல்லுறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் கொலம்பிய ஜனாதிபதியுடன் ஜனா திபதி கலந்துரையாடியதாகவும் தெரிவிக்க ப்படுகிறது. (எ-11)

வெளிவந்துவிட்டது
G.C.E O/L
குடியுரிமைக் கல்வியும் சமூக நிர்வாகமும்
6 வருட கடந்தகால வினாக்களும் விடைகளும்
புத்தகசாலைகளில் கிடைக்கும்.
பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்களுக்கு
விசேட கழிவு வழங்கப்படும்.
T:P:-0771753838
(7660)
ஐடியல் கல்லூரி
கிறீன் ஆஸ்பத்திரி பின் வீதி, மானிப்பாய்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், சரியான உச்சரிப்பு, நேரடியாக பிரெஞ் ஆசிரியரிடம் படிக்கலாம். இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும் படிக்கலாம். LETTRE & PHOTOCOPIES இலவசம். உடன் பதியுங்கள்
குறிப்பு :வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ நிறுவனம் AF மட்டுமே. பொய் விளம்பரங்களை நம்பாதீர்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
கச்சேரி → புகையிரதகடவை → AF or ஆரியகுளத்திலிருந்து றக்கா றோட் → AF



MOBILE PHONE REPAIRING COURSE
(கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி)
நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா?
சுயதொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா?
வேலைசெய்துகொண்டுபகுதிநேரமாகவருமானம்ஈட்டவேண்டுமா?
4 days course
புதுப் பொலிவுடன் யாழ்.நகரில் உங்கள் எதிர்காலத்துக்கு மாதம் 150,000/-க்கு மேல் வருமானம் ஈட்ட ஒரு வாய்ப்பு
திருத்தும் துறையில் 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000ற்கும் மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய முதற்தர ஆசிரியருமான Ganesh.K
பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்க முடியும். நவீன Mobile Phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும்.
BTEC
BRITISH TECHNOLOGY ENGLISH COLLEGE
#21, Sirampiyadi Lane, Jaffna. T:P:-0217904468 MO:- 0777444225
(C-8582)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.